நாவாந்துறைப் படிப்பகம் நாவாந்துறைப் படிப்பகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 09 வெள்ளிக்கிழமை (25-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:203

# தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி தேர்தலைக் குழப்பப் புலிகள் திட்டம்!

## தலைநகர் கொழும்புக்குள் பெருமளவில் ஊடுருவலாம்

கொழும்பு.ஓகஸ்ட்25

**நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலைக் குழப்பும் விதத்தில் தலைநகர் கொழும்பிலும் தெற்கிலுள்ள ஏனைய முக்கிய நகரங்களிலும் பல தொடர் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகவும், அதற்கு முன்னேற்பாடாக அந்த அமைப்பின் தற்கொலைத்தாக்குதல் நபர்கள் பெரும் எண்ணிக்கையில் தென்னிலங்கைக்குள் ஊடுருவியிருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்தை எச்சரித்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இவ்வாறு ஊடுருவியிருக்கக் கூடிய புலிகள் உறுப்பினர்களைக் கைது செய்வதற்காக கொழும்பு, புத்தளம், சிலாபம், அம்பாறை, நீர்கொழும்பு, வத்தளை, கம்பஹா மற்றும் முக்கிய நகரங்களில் அடிக்கடி தேடுதல் வேட்டைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களுக்கு அதிக வாய்ப்பு இருப்பதால் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகளின் போது மிக அவதானமாக இருக்

(14ஆ'ம் பக்கம் பார்க்க)

## விறகு வெட்டச் சென்ற நால்வரை காணோம்

மட்டக்களப்பு,ஓக.25

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைக்கிராமங்களில் ஒன்றான கவுறுவெலவுக்கு நேற்று முன்தினம் விறகு வெட்டச்சென்ற 4 தமிழர் காணாமல் போய்விட்டனர்.

மு.செகராசசிங்கம்(வயது 43), ச.தவராசா(வயது 32), ம.சுப்பிரமணியம் (வயது34), மு.சண்முகநாதன் (வயது 20) ஆகியோரே காணாமல் போய்விட்டதாக மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமை ஆணைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 2 முஸ்லிம்கள் கடத்தப்பட்டனர்

திருகோணமலை,ஓக.25

திருகோணமலையில் இயந்திரப் படகு ஒன்றில் சென்று கொண்டிருந்த இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிண்ணியாவிலிருந்து மூதூருக்கு ஐஸ்கட்டிகளை எடுத்துச் சென்ற சமயம் மேற்படி இரு இளைஞர்களும் நேற்று முன்தினம் படகுடன் சேர்த்துக் கடத்தப்பட்டுள்ளனர்.

## ஸ்ரீலாலின் பிரியாவிடை வைபவத்தில் பலரின் கவனத்தையும் ஈர்த்த இரு இராணுவ அதிகாரிகள்!

கொழும்பு,ஓக.25

ஓய்வுபெற்றுச் செல்லும் இராணுவத் தளபதி ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவுக்கு பிரியாவிடை அளிக்கும் வைபவம் நேற்றுக் கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் நடந்த சமயம் இரண்டு இராணுவ உயரதிகாரிகள் மிகவும் அந்நியோன்னியமாக உரையாடியது செய்தியாளர்கள் உட்படப் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவுக்கு பிரியாவிடை அளிக்கும் மரியாதை அணிவகுப்பு முடிவுற்றதும் தேநீர் விருந்துபசாரம் இடம்பெற்றது.

யாழ். குடாநாட்டில் கடமையிலிருந்த சமயம் முரண்பட்டுக் கொண்டதாகக் கருதப்பட்ட மேஜர் ஜெனரல்கள் ஜானக பெரேராவும், சரத் பொன்சேகாவுமே தேநீர் விருந்தில் அருகருகே நின்று மிகவும் நெருக்கமாக - அந்நியோன்னியமாக - நீண்ட நேரம் உரையாடியபடி சிற்றுண்டி

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியிலிருந்து பௌஸியை நீக்கக் கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு.ஓக.25

ஏ.எச்.எம்.பௌஸி உறுப்பினராக இருக்கும் ஓர் அமைச்சரவையில் எம்.எச்.எம்.அஷ்ரப்போ அல்லது வேறு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களோ இடம்பெறமாட்டார்கள்; இடம்பெற முடியாது.

அக்கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சட்டத்தரணி ராவூக் ஹக்கீம் இவ்வாறு அறிவித்திருக்கின்றார்.

மக்காவுக்குத் திடீரெனப் புறப்பட்டுச் சென்றிருக்கும் அஷ்ரப் அங்கிருந்தவாறே கொழும்பில் உள்ள ஒரு வானொலிச் சேவைக்குப் பேட்டியளித்தார்.

அப்பேட்டியிலும் பௌஸி ஓர் உறுப்பினராக இருக்கும் அமைச்சரவையில் தாம் அங்கம் வகிக்க முடியாது என்று அஷ்ரப் குறிப்பிட்டதாகத் தெரிகின்றது.

"எமது தலைவர் அஷ்ரப் தொடர்ந்து அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக இருப்பதாயின், அமைச்சரவையில் இருந்து பௌஸியை நீக்கவேண்டும்" - என்று ஹக்கீம் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான அமைச்சர் பௌஸிக்கும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் அஷ்ரப்புக்கும் இடையிலான கருத்து வேறுபாடு முற்றியதை அடுத்து அஷ்ரப் அமைச்சர் பதவியிலிருந்தும் அவரது கட்சியைச் சேர்ந்த மற்றிருவர் பிரதி அமைச்சர் பதவியிலிருந்தும் ராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

இப்பிரச்சினையைச் சமரசமாகத் தீர்க்க - இரு தரப்புக்கும் இடையில் ஓர் இணக்க நிலையை ஏற்படுத்த - பல முக்கிய பிரமுகர்கள் விடாமுயற்சி எடுத்துவருகின்றனர்.

எனினும் இரு தரப்பினரும் மாறி மாறி மற்றைய தரப்பு மீது சேறை வாரி இறைப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (உ)

## தேர்தலில் போட்டியிடுவதற்காக சரத் முனசிங்க நேற்று பதவி துறப்பு

### அவரின் இடம் தமிழர் ஒருவருக்கு?

கொழும்பு,ஓக.25

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க நேற்று தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்காகவே அவர் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் சரத் அமுனுகமவுக்கு நெருக்கமானவர் எனக் கருதப்படும் தமிழர் ஒருவர் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் புதிய தலைவராக நியமிக்கப்படக்கூடும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

## வயோதிபர் உயிரிழப்பு

வவுனியா,ஓக.25

கைதடிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

நாவற்குழி, கல்யாணபதியைச் சேர்ந்த வல்லிபுரம் தியாகராசா (வயது70) எனபவரே உயிரிழந்தவராவார். (இ-9)

## உருக்குலைந்த நிலையில் எலும்புக் கூடு

யாழ்ப்பாணம்,ஓக.25

வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காடு, பொற்பதி என்னும் இடத்தில் உருக்குலைந்த நிலையில் எலும்புக் கூடு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட இந்த எலும்புக் கூடு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ச.ஏகநாதனின் பணிப்பின் பெயரில் அந்த இடத்திலேயே புதைக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாகப் பொற்பதி இராணுவத்தினர் பருத்தித்துறைப் பொலீஸாரிடம் தொடர்பு கொண்டதை அடுத்து குறிப்பிட்ட பகுதி கிராம அலுவலர் ஊடாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை அடுத்தே எலும்புக் கூட்டைப் புதைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-10-109)

## எனது அமைச்சர் பதவியை தீர்மானிப்பது அஷ்ரப் அல்லர்

### அல்லாவேதான் என்கிறார் பௌஸி

கொழும்பு,ஓக.25

நான் அமைச்சராக இருப்பதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிப்பது அஷ்ரப் அல்லர்; அல்லாவேதான்!

- இப்படிக் கூறியிருக்கின்றார் அமைச்சர் பௌஸி.

அஷ்ரப்போ அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்காரர்களோ என்னைப் பலிக்கடாவாக்கிவிட முடியாது.

நான் இப்போது அமைச்சராக இருப்பது அல்லாவின் செயல். அவரின் ஆசியுடன் நான் அப்பதவியில் நீடிப்பேன்.

அஷ்ரப் நினைப்பது போல என்னை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிடமுடியாது. எனது தலைவிதியை அவர் தீர்மானிக்க முடியாது. அல்லாதான் முடிவு செய்ய வேண்டும்.

எக்காரணம் கொண்டும் முஸ்லிம் காங்கிரஸ் குறித்து நான் கூறிய கருத்துக்களை வாபஸ் பெறப் போவதில்லை.

- இப்படி பௌஸி மேலும் தெரிவித்தார். (உ)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் வவுனியாவில் கைதாகி விடுவிப்பு

வவுனியா,ஓக.25

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் வவுனியாவில் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சிவசோதி விருந்தினி (வயது 24), தம்பையா ஜெகதீஸ்வரன் (வயது 24), மகாதேவா மணிவண்ணன் (வயது 25) ஆகியோரே இந்த மூவரும் ஆவர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இவர்கள் வந்த சமயம் பிரமணாளங்குளத்தில் படையினரின்சோதனை முகாமில் வைத்து இவர்கள் கைதானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாயன்று கைதான இவர்கள் வவுனியாவில் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர். (இ-164)

## ஆலயச் சுற்றாடலில் சன்னங்கள்!

யாழ்ப்பாணம்,ஓக.25

நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் நேற்று முன்தினமும் துப்பாக்கிச் சன்னங்கள் விழுந்தன.

நல்லூர் ஆலயக் கிழக்கு வீதி, செட்டித்தெரு பகுதிகளில் இரவு 7.30 மணியளவில் இந்தச் சன்னங்கள் விழுந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

அரியாலைப் பகுதியில் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வேளையிலேயே சன்னங்கள் நல்லூரில் விழுந்தன என்று கூறப்படுகிறது.

வீடுகள் மற்றும் மக்கள் நடமாடும் பகுதிகளில் சன்னங்கள் விழுந்த போதும் எவரும் காயமடையவில்லை.

இதேவேளை யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதியிலும் சன்னம் ஒன்று வீழ்ந்து வீடு ஒன்றின் கூரை சேதமடைந்தது. (இ-5-10)

## செவ்வாய் புறப்படும் கப்பலுக்கு பயணச்சீட்டுக்கள் விற்று முடிவு

யாழ்ப்பாணம்,ஓக.25

அடுத்த செவ்வாய்க்கிழமை இங்கிருந்து செல்லவிருக்கும் 'சிற்றி ஓவ் றிங்கோ' பயணிகள் கப்பலுக்கான சகல பயணச்சீட்டுக்களும் விற்று முடிந்துவிட்டதாகவும் -

எனவே அடுத்த செவ்வாய்க் கிழமை அக்கப்பலில் பயணம் செய்யும் நோக்குடன் பயணச்சீட்டுப் பெற யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு சமுகம் தருவது பயனற்றது என்றும்-

யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த வியாழக்கிழமை(31ஆம்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் மறியல் நேற்று இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஓக.25

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களினால் கடந்த மூன்று நாள்களாக நடத்தப்பட்டு வந்த மறியல் போராட்டம் நேற்று இடைநிறுத்திவைக்கப்பட்டது.

அரசினால் வழங்கப்படும் 600 ரூபா இடைக்கால மேலதிகக் கொடுப்பனவு தமக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி இந்த ஊழியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுப் பகல் ஒரு மணியளவில் இந்த ஊழியர்களின் போராட்டத்தில் தலையிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஊழியர்களின் கோரிக்கையை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் தீர்த்துவைப்பதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை 3.00 மணிக்கு மறியல் போராட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

இதற்கிடையில் சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் நேற்று விடுத்த அறிக்கையில் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன் சகல ஊழியர்களையும் இன்று கடமைக்குத் திரும்புமாறு கோரியுள்ளது. (இ-15-173-5)

## நாட்டுக் கூத்து

யாழ்ப்பாணம்,ஓக.25

நெடுந்தீவு சென். அன்ரனீஸ் நிலாஜோதி முத்தமிழ் நாடகமன்றத்தினரால் இன்று இரவு 7மணிக்கு "பொன்நூல் செபமாலை" நாட்டுக் கூத்து மேடையேற்றப்படவுள்ளது.


இந்த நிகழ்வில் தீவகக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தரும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளருமான செல்லையா மெற்றாஸ்மயில், யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.மதனராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (இ-7)

## அமிரின் பிறந்த நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.25

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் பிறந்ததினத்தை முன்னிட்டு நாளை யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டணியின் மாவட்டத் தலைமைச் செயலகத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (இ-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 31 - 10 - 1956

உதிர்வு 27 - 07 - 2000

### அமரர் றோமான் அன்ரனி

(முன்னாள் கிராமசேவையாளர் - குருநகர் J/68, J/69)

அன்பையும், பாசத்தையும், உயர்வையும் எமக்களித்தவரே!
இமைப் பொழுதிலும் உம்மை மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

நாளை (26-08-2000) சனிக்கிழமை காலை 7.15 மணிக்கு அவரது ஆத்ம சாந்திக்காக புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் பங்குகொண்டு அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் உபசரணையிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள்.**

*417/10, கடற்கரை வீதி,*
*குருநகர்.*

(77645)

## கண்ணீர்ப் பூக்கள் காணிக்கை

யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும்
எம் மனதில் நீங்காது குடிகொண்ட
என் இனிய மதிப்பிற்குரிய நண்பனுமாகிய
அமரர்
**கார்த்திகேசு மாணிக்கவாசகர்.**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர்,**
**லாலா சோப் தொழிற்சாலை,**
*அச்சுவேலி.*

(c/12675)

## கண்ணீர் அஞ்சலி

### காசிநாதன் •ஜோதிநாதன்

(சோதி அண்ணை)

(யாழ். கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சபை
முன்னாள் பொருளாளரும், தற்போதைய செயலாளரும்,
யாழ். சாமுவேல் அன்சன்ஸ் முன்னாள் கணக்காளரும்)

எங்கள் ஆலய வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் அரும்பணியாற்றியவர். சமயப் பணியுடன் சமூக நலனுக்காகவும் உழைத்தவர். அன்னாரின் மறைவினால் துயருறும் மனைவி, உற்றார், உறவினர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கற்பக விநாயகர் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலனசபை,**
**யாழ். கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர்**
**தேவஸ்தானம்.**

(77638)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவ நண்பர்கள்
**ஜெயசீலன், தயாதரன்**
ஆகியோரின் பாசமிகு தாயார்
**திருமதி செல்லத்துரை மகேஸ்வரி**

அவர்களின் மறைவினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**O/L DAY CLASS,**
**தரம் 11A, B வகுப்பு**
**மாணவர்கள்.**

(C/12680)


**BRIGHTMAN**
**கல்வி நிலையம்**
*(நீராவியடிப் பிள்ளையார் கோவில் முன்பாக)*
பிறவுண் றோட், யாழ்நகர்.
**A/L 2001, 2002**
**பொதுஆங்கிலம்**
**By:- Mr. M.A. HARI**
ஆரம்பம்:-
இன்று 25-08-2K
Fri. 4மணி
(77633)

எமது புதிய CD வெளியீடுகள்
சரத்குமார், மீனா, கவுண்டமணி
*நடித்த*
★ மாயி
அருண்குமார், சுவலட்சுமி
*நடித்த*
★ கண்ணால் பேசவா
GET LEE IN
LETHAL WEAPON
DESPERADO
சிறுவர்களுக்கான
DINOSAUR
*எம்மிடம் வீடியோ CDக்களும் விற்பனைக்கு உண்டு*
**வீடியோ ஆனந்த்**
**மானிப்பாய்.**
(77649)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
இன்று முதல்
குதூகல ஆரம்பம
அப்பாஸ், கௌசல்யா,
கார்த்திக், ஹீரா
மற்றும் பலர் நடிப்பில்
**பூவேலி**
காட்சிகள்:- 10-30, 2-00
(புதிய நேரம்)
(C/12325)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
**அஜித் - ஷாலினி**
நடிப்பில்
**அமர்க்களம்**
(ரீலீஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)
(77639)


## ஆன்ம சாந்திக் கிரியை



தோற்றம் 24 - 07 - 1933

மறைவு 26 - 07 - 2000

### திருமதி ஜானகி செல்வநாயகம்

26-07-2000 புதன்கிழமை முற்பகல் சிவகதி சேர்ந்த திருமதி ஜானகி செல்வநாயகம் அம்மையாரின் ஆன்ம சாந்திக் கிரியைகள் அன்னவரின் இல்லத்தில் இன்று (25-08-2000) வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறவிருக்கின்றன.

குறித்த பிரார்த்தனை நிகழ்வில் பங்குபற்றும் வண்ணம் உறவினர்களையும் நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**செ.செல்வவிநாயகர்** (மகன்),
**சி.சிவானந்தம்** (மருமகன்).

*இந்துக் கல்லூரி ஒழுங்கை,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(77651)

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்!

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 - 07 - 1932

மறைவு 06 - 09 - 1999

அமரர் ஆச்சாரிய திலகம் (தாவடி)

### வீரவாகு ஐயாத்துரை (துரையர்)

ஓராண்டு நிறைவில் உம்பிரிவின் நினைவில் நாம் உத்தமராய் நீங்கள் பதித்த சுவடுகளைத் தொட்டு, கண்களில் ஒற்றுகின்றோம். எம் உயர்வுக்காக, வாழ்வின் வளத்துக்காக நீங்கள் எவற்றையெல்லாம் எண்ணியிருந்தீர்களோ அவற்றைச் சாதித்து முடிக்கும் பணியில் முனைந்து நிற்கின்றோம். நீங்கள் காட்டிய வழியில் எம் பணி தொடர மேலிருந்தே கருணை ஒளி காட்டிவழி காட்டுங்கள்.

பிரிய மனைவி: **ஐ.அன்னபூரணம்,**
**பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.**

*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு, கொக்குவில்.*

(77620)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர்
அமரர்

### கார்த்திகேசு மாணிக்கவாசகர்

22-08-2000 அன்று கொழும்பில் அமரத்துவமடைந்த யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் **கார்த்திகேசு மாணிக்கவாசகர்** அவர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் எமது திணைக்கள செயற்பாட்டுக்காகவும், விவசாய நடவடிக்கைகளுக்காகவும் இடையறாது ஒத்துழைத்தார். அன்னாரின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த வேதனை அடைகிறோம். அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உதவி ஆணையாளர்,**
**திணைக்கள உத்தியோகத்தர்கள்,**
**பெரும்பாக உத்தியோகத்தர்கள்,**
**தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்,**
**கமநல கேந்திர நிலைய உத்தியோகத்தர்கள்,**
**கமத்தொழில் மற்றும்**
**கமநல காப்புறுதிச்சபை உத்தியோகத்தர்கள்.**

*கமநல சேவைகள் திணைக்களம்,*
*யாழ்.மாவட்டம்.*

(77648)

# முதலமைச்சர் பதவி கிடைத்தால் 'ரௌடிகளை' பூண்டோடு அழிப்பேன்!

## பூலான்தேவி கூறுகிறார்



சென்னை,ஓக.25

"இந்தியாவை ரௌடிகளும் மாபியா கும்பலைச் சேர்ந்தவர்களும்தான் ஆட்சி செய்கின்றனர். நான் முதலமைச்சரானால் அவர்களை இருந்த இடம்தெரியாமல் அழித்து விடுவேன்"

இவ்வாறு முன்னாள் கொள்ளைக்காரியும், இந்நாள் அரசியல்வாதியுமாகிய பூலான்தேவி தெரிவித்தார்.

அம்பேத்காரின் பிறந்த நாள் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காகச் சமீபத்தில் சென்னை வந்தபோது, அவர் அளித்த பேட்டியில் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் அந்தப் பேட்டியில் -

சம்பல் பள்ளத்தாக்கில் கொள்ளைக்காரியாக இருந்தபோது தவறு செய்தவர்களுக்குத் தண்டனையைத் தானே கொடுத்ததாகக் கூறிய அவர் தற்போது குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து சுலபமாகத் தப்புவதைப் பார்க்கையில் கவலையாக உள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் நலிவடைந்த மக்களை மேலும் நசுக்கி வருவதாகவும் -

மக்கள் பிரச்சினைகளை எதிர்த்துப் போராட முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

மத்திய பிரதேசத்தில் உள்ள சம்பல் பள்ளத்தாக்கை முகாமாகக் கொண்டு, அப்பகுதியைக் கலங்கடித்த கொள்ளைக்காரி பூலான்தேவி அரசிடம் சரணடைந்து, சிறிது கால சிறைத்தண்டனையின் பின்னர் பொது மன்னிப்புப் பெற்றதும், அதன் பின்னர் முலாயம் சிங்கின் சமாஜ்வாடி கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானதும் குறிப்பிடத்தக்கது.(ஒ)

# அகதிகள் மீதான தாக்குதல்கள்: ஐ.நாவின் கருத்துக்கு பிரிட்டன் மறுப்பு!

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோருவோர் மீது இனாீதியான தாக்குதல்கள் தொடர்வதாகவும் -

தஞ்சம் கோருவோரைப் பாதுகாக்க பிரிட்டன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு அறிவித்துள்ளது.

பிரிட்டனில் வாழும் சிறுபான்மையினர், தாங்கள் மிக மோசமான - அபாயமான -நிலைமைக்குச் சென்று கொண்டிருப்பதாகக் கருதுகின்றனர் என்றும் -

இனாீதியான தாக்குதல்களில் ஈடுபடுபவர்களுக்குச் சாதகமாக பிரிட்டிஷ் பொலீஸார் செயற்படுவதாகவும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் இந்தக் கருத்துக்களை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் ஜாக்ஸ்ரோ முற்றாக நிராகரித்துள்ளார். அத்துடன் பிரிட்டன் தொடர்பான இத்தகைய கருத்துக்களை பகிரங்கமாக வெளியிட்ட ஐ.நாவின் செயல் இங்கிதம் அற்றது என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ-6)

முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் மகன் சம்பந்தப்பட்ட 133 கோடி ரூபா உரப்பேரை ஊழல் வழக்குத் தொடர்பாக பிறேசில் நாட்டு வியாபாரத் தரகர் ஏ.இ.பிண்டு பிரிட்டனில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டார்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்தின் செவ்வாய்க்கிரக ஆய்வுத்திட்டத்தில் பங்கேற்க தமிழகத்தைச் சேர்ந்த பாலபிரியதர்சினி, பிரசாத் ஆகியோர் உட்பட 12 இந்திய மாணவ அறிவியலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### காட்டிலிருந்து கோபால் திரும்பினார்

சந்தனக்கடத்தல் வீரப்பனைச் சந்தித்துவிட்டு நேற்றுக்காலை சென்னை திரும்பியுள்ள அரசுத்தூதர் கோபால் கொண்டுவந்துள்ள, வீரப்பனின் செய்திகள் அடங்கிய ஓர் ஒலிநாடா மற்றும் இரு ஒளிநாடாக்களில் உள்ள விடயங்கள் குறித்து கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவும் தமிழக முதல்வர் கருணாநிதியும் சென்னையில் இன்று ஆலோசனை நடத்துகிறார்கள்.

இதற்கிடையில் வீரப்பன் குறிப்பிட்டிருந்த, தமிழகச் சிறையில் உள்ள 5 தமிழ்த் தீவிரவாதிகள் மீதான வழக்குகளை விலக்கிக் கொள்ள மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

## தமிழக அகதிகள் முகாமில்

# பதினாறு இலங்கைத் தமிழர்கள் சாகும் வரை உண்ணாவிரதம்!

## அரசின் நடவடிக்கையை எதிர்த்து

சென்னை,ஓகஸ்ட்25

**தமிழ்நாட்டில் சென்னை அருகே வேலூரில் உள்ள இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்களில் 16 பேர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்துள்ளனர்.**

வேலூர் சிறப்பு முகாமிலிருந்து, மதுரை அருகே உள்ள மேலூர் சிறப்பு முகாமுக்கு அகதி ஒருவரை மாற்றத் தமிழக அரசு அதிகாரிகள் முயற்சிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தை அவர்கள் நடத்துகின்றனர்.

இலங்கையில் இருந்து தஞ்சம் கோரித் தமிழகம் செல்பவர்கள் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள அகதிகளுக்கான முகாம்களில் குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இதே சமயம் -

இலங்கைத் தமிழர் இயக்கங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் சிறப்பு அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு இயக்கத்தினரும் தனித்தனிச் சிறப்பு முகாம்களில் வைக்கப்படுவது வழக்கம். இதன்படி வேலூர் முகாமில் ஒரு இயக்கத்தின் ஆதரவாளர்களும் மேலூர் முகாமில் வேறோர் இயக்கம் சார்ந்தவர்களும் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், வேலூர் முகாமிலிருந்து ஒருவரை, மேலூர் முகாமுக்கு மாற்ற தமிழக அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

சம்பந்தப்பட்டவரை மேலூர் முகாமுக்கு மாற்றினால், அங்கு அவருக்கு மாற்று இயக்கத்தினரால் தீங்கு நேரிடும் என்றும் -

அதனால் அவரைத் தொடர்ந்து வேலூர் முகாமிலேயே தங்க வைத்திருக்கும்படி கோரியும் தற்போது உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கப்பட்டுள்ளது. (ஒ)

ஆந்திர மாநிலத்தில் பெய்த பலத்த மழையால் 70 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விளைந்திருந்த உணவுப் பயிர்கள் அழிந்தன.

### பாக். அதிபர் வலியுறுத்தல்

இஸ்லாமாபாத்,ஓக.25

காஷ்மீர் பிரச்சினையில் அங்கு வாழும் இஸ்லாமியர்களின் விருப்பத்துக்கு மாறாக இந்தியா எடுக்கும் எந்த நடவடிக்கையையும் பாகிஸ்தான் ஏற்காது என்று பாகிஸ்தானிய ஜனாதிபதி ரபீக் ஜராக் வலியுறுத்திக் கூறியுள்ளார். (ஒ)

### இந்தியாவில் வேலைநிறுத்தம்

புதுடில்லி,ஓக.25

இந்தியாவில் தொலைத்தொடர்புத் துறையை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அதிகாலை முதல் 3லட்சம் அரசுத் தொலைத் தொடர்பு ஊழியர்கள் இரண்டு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்துகின்றனர். (ஒ)

## மனித வெடிகுண்டுகள் மூலம்

# இஸ்ரேலில் அழிவை ஏற்படுத்த ஒசாமா பின்லேடன் திட்டம்!

## கைதான தீவிரவாதி தகவல்



டெல்அவிவ்,ஓக.25

இஸ்ரேலில் உள்ள முக்கிய இடங்களில் மனித வெடிகுண்டுத் தாக்குதல்கள் மூலம் பாரிய அழிவுகளை ஏற்படுத்த இஸ்லாமியத் தீவிரவாதத் தலைவரான ஒசாமா பின்லேடன் திட்டமிட்டுள்ளதாகவும் இது குறித்து விழிப்பாக இருக்கும்படியும் இஸ்ரேல் உளவுத்துறையினர் அரசை எச்சரித்துள்ளனர்.

சமீபத்தில் 'காஸா' குன்றுப் பகுதியில் செயற்பட்டு வரும் அகதி முகாம் ஒன்றில் இருந்து இஸ்ரேலியப் படையினரால் கைது செய்யப்பட்ட நபீல் ஆகல் என்பவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இத்தகவல் வெளியானதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கைதாகியுள்ள ஆகல், ஒசாமா பின்லேடனின் உதவியோடு ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் உள்ள தீவிரவாதப் பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்றவரென்றும் -

பின்லேடனின் உத்தரவையேற்று வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கான திட்டங்களை அவர் செயற்படுத்தி வந்ததாகவும் -

அதிகாரி மேலும் கூறினார்.

பின்லேடனின் குழுவைச் சேர்ந்த பலர் இஸ்ரேலுக்குள் ஊடுருவியுள்ளதாக கைதான ஆகல் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# 143 பேருடன் சென்ற விமானம் வளைகுடாக் கடலில் விழுந்தது!

## ஒருவர்கூட உயிர் தப்பவில்லை!!

கெய்ரோ,ஓக.25

'கல்வ் எயர்' நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் விமானம் விபத்துக்குள்ளாகி பாரசீக வளைகுடாக் கடலில் விழுந்ததில் அதிலிருந்த 143 பேரும் உயிரிழந்தனர்.

எகிப்திலிருந்து பஹ்ரெய்னுக்குச் சென்று கொண்டிருந்த இந்த விமானம் பஹ்ரெய்ன் விமான நிலையத்தில் தரையிறங்குவதற்குச் சற்று முன்பாக விபத்துக்குள்ளானது.

ஒரு பக்க இயந்திரத்தில் தீப்பிடித்து எரிந்தபடி விமானம் கடலில் விழுந்ததாக விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். விமானம் தரையிறங்க இரண்டு தடவைகள் முயற்சித்தும் முடியாததால் மூன்றாவது தடவையாக தரையிறங்க அனுமதி கேட்டுக்கொண்டிருந்தபோது, 'ராடர்' கருவியிலிருந்து விமானம் மறைந்துவிட்டதாக விமான நிலைய அதிகாரிகள் கூறினார்கள்.

விமானத்தில் இருந்த 8 விமானிகள் உட்பட 143 பேரினதும் சடலங்களும் விமானத்தின் தகவல் பதிவுப் பெட்டிகளும் மீட்கப்பட்டுவிட்டதாக பஹ்ரெய்ன் அரசு தெரிவித்துள்ளது.

பயணிகளில் அதிகமானோர் எகிப்து, பஹ்ரெய்ன் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் -

விமானப் பணிப்பெண்களில் ஒருவர் இந்தியாவைச் சேர்ந்தவர் என்றும் -

வார இறுதி விடுமுறையினால் பயணிகளில் சிறுவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்க விமான நிபுணர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

போயிங் ரக விமானங்களில் எரிபொருள் தாங்கியின் அருகிலேயே மின்சார இணைப்புகள் இருப்பதனால் மின்சாரக் கோளாறுகளால் ஏற்பட்ட தீப்பொறியால் எரிபொருள் தாங்கியில் தீப்பிடித்திருக்கலாம் என்று தெரிவித்தார். (ஒ-10)

# ஜெயலலிதாவுக்கு லண்டனில் பலகோடி ரூபாவுக்கு சொத்து!

## பிரிட்டிஷ் பொலீஸார் கண்டுபிடிப்பு!!

சென்னை,ஓக.25

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் லண்டனில் 5நட்சத்திர சொகுசு ஹோட்டலை வாங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்திய ரூபாவில் 250 கோடி பெறுமதியான இந்தக் ஹோட்டல் ஜெயலலிதா முதல்வராக இருந்த காலகட்டத்தில் வாங்கப்பட்டிருப்பதாகவும் -

இந்தச் சொத்தை ஒளிநாடாவில் படம் பிடித்துத் தகுந்த ஆவணங்களோடு சென்னைக்கு லண்டன் பொலீஸார் அனுப்பியுள்ளதாகவும் -

தமிழகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த ஆதாரங்கள் கிடைத்தவுடன் அது குறித்து ஆலோசனை நடத்தி, ஜெயலலிதா மற்றும் சசிகலா மீது புதிய சொத்துத் தொடர்பாகத் தனி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்றும் -

பொலீஸார் மேலும் கூறினர்.

தினகரனுக்கு 56 கோடி ரூபாவுக்கு லண்டனில் சொத்து இருப்பதாக முன்னர் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து ஜெயலலிதா, சசிகலா ஆகியோரும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் பிரிட்டனில் வாங்கியுள்ள சொத்துக்கள் குறித்து தகவல் தருமாறு லண்டன் பொலீஸாரிடம் சிறப்புத் தனி நீதிமன்றம் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

தென் கொரியாவில் நேற்று இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 பேர் கொல்லப்பட்டதுடன் 19 பேர் காயமடைந்தனர்.

# ஊழல் குற்றச்சாட்டுக் குறித்து தமிழக அமைச்சரிடம் விசாரணை!

சென்னை,ஓக.25

தமிழக அமைச்சர் அந்தியூர் செல்வராஜ் மற்றும் இருவர் மீதான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை நடத்தும்படி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் மாநிலப் பொலீஸாரைப் பணித்துள்ளது.

பருத்தித்துணி உற்பத்தி மற்றும் விற்பனையில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் -

இந்த முறைகேடுகளால் 2 கோடி 56லட்சம் ரூபா ஊழல் நடந்திருப்பதாகவும் -

அ.தி.மு.க. சட்டப் பிரிவுச் செயலாளர் முறையீட்டுமனு ஒன்றைத் தாக்கல் செய்ததை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அதிகளவு ஊழல் நடைபெற்றதாகக் கூறப்பட்ட பருத்தித்துணி உற்பத்தித் துறையில், தி.மு.க. ஆட்சியிலும் ஊழல் தொடர்வதாகக் கருதப்படுகிறது. (ஒ-10)

# 130 கிறிஸ்தவர்கள் சீனாவில் கைது!

மத்திய சீனாவில் உள்ள ஸங்-சுங் தேவாலயப்பங்கைச் சேர்ந்த 130 கிறிஸ்தவர்களை சீன அரசு கைது செய்துள்ளதாக ஹொங்ஹொங்கில் செயற்படும் மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 3 அமெரிக்க மத போதகர்களும் அடங்குவார்கள் என்றும் -

கடந்த புதன்கிழமை தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டதாகவும் -

அந்த அமைப்பு கூறியுள்ளது. (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

(முன்னாள் அரச அதிபர், யாழ் மாவட்டம்)

மானிப்பாய் இந்துவின் மைந்தனாக உருவாகி, யாழ் மாவட்ட அரச அதிபராக உயர்ந்து மனித நேயத்துடன் மக்கள் தொண்டாற்றி புகழ் பூத்த மனிதனாக அமரத்துவம் அடைந்த அன்னாருக்கு எமது இதயஅஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழையமாணவர்கள்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(77656)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ். அரச அதிபர்

### அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். எமது பிரதேச மக்களின் இன்னல் துடைக்க அரும்பெரும் சேவை ஆற்றிய அன்னாருக்கு ஆழ்ந்த அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.
தெல்லிப்பழை.

(12669)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் அரச அதிபர்

### அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று நாம் மனம் வருந்துகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(சி/12670)

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை, தம்பசிட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கட்டைவேலிப் பிரிவு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரும் முன்னாள் யாழ். மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் சங்கச் செயலாளருமாகிய

### அமரர் சங்கரப்பிள்ளை முருகேசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பிறப்பு,இறப்பு,விவாகப்பதிவாளர் சங்கம்,
வடமராட்சி.

(77655)

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, ஓக. 25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் வலய அலுவலகத்தில் நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் மு. வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## மட்டு. மாவட்ட கூட்டணி வேட்பாளர் தெரிவுக் கூட்டம்

கொழும்பு, ஓக. 25

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி கிளையின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான யோசப் பரராஜசிங்கம் தலைமையில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் மட்டக்களப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மட்டக்களப்பு தேர்தல் தொகுதியிலிருந்து 2 வேட்பாளர்களும், பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் இருந்தும் கல்குடா தேர்தல் தொகுதியிலிருந்தும் தலா 3 வேட்பாளர்களும் தெரிவு செய்யப்படவுள்ளதாகக்கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் ஒருவர் வெளிநாடு சென்று விட்டார், இருவர் இம்முறை ஒதுங்கியுள்ளனர்.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் தேர்தலில் மூன்று புதிய முகங்கள் போட்டியிடவுள்ளதாகத் தெரியவருகிறது.


(சாவகச்சேரி)

### மணி ஜுவெல்லர்ஸ்

கிளை:

### ஈசன் ஜுவெலறி

மேற்படி ஸ்தாபனங்கள்
பிரதான வீதி, சங்கானையில் உள்ள
இராஜி கோல்ட் சென்ரர்
இல் தற்காலிகமாக இயங்கி வருகின்றதென்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
க. நாகரத்தினம் (மணிப் பத்தர்)
நா. ஈசன் (77635)

சங்கானை.


## இலங்கை மின்சார சபை யாழ். பிரதேசம் மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் அவசர வேலைகள் செய்ய இருப்பதனால் 2000—08—26ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிமுதல் பிற்பகல் 2-00 மணிவரை யாழ். குடாநாடு முழுவதற்குமான மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதைச் சகல மின்பாவனையாளருக்கும் இத்தால் அறியத்தருகிறேன். வேலைகள் குறித்த நேரத்திற்கு முன்னர் முடிவடைந்தால் மின் விநியோகம் உடன் ஆரம்பிக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

இதனால் பாவனையாளருக்கு ஏற்படும் சிரமங்களுக்காக வருந்துகிறேன்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை"

யாழ். பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை
சுன்னாகம்,

(சி/12676)

## இன்று கூட்டம்

உணவு மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்- மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் பெற்றோலியக்கூட்டுத்தாபன அதிகாரிகள், பிரதேச செயலர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-5)

## புதிய மாணவரைச் சேர்க்க விண்ணப்பம்

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தரம் ஒன்று தரம் ஆறுஆகியவகுப்புக்களில் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரை குறித்த பாடசாலைகளில் ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் காலை 9 மணி தொடக்கம்பிற்பகல் ஒரு மணிவரை விண்ணப்பப்படிவக் கட்டணமாக 250 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி செப்ரெம்பர் 21ஆம் திகதி என்றும் — ஏனைய வகுப்புக்களில் அனுமதி பெறவிரும்பும் மாணவர்களும் அதற்கான விண்ணப்பங்களைப் பெறமுடியும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## விளையாட்டு விழா

வலி. வடக்கு, ஓக. 25

கோண்டாவில் வடக்கு மத்திய சன சமூக நிலைய மத்திய இராம முன்னேற்றச் சங்க மத்திய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சி. ஆனந்தராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசாவும் சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமியும் கௌரவ விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. நிர்மலன், கிராம அலுவலர்களான ம. தயாபரன் வ. சந்திரசேகரம், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எஸ். செல்வரட்ணம் மற்றும் முன்னாள் கிராம அலுவலர் ச. கனகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

## முதல் திங்கள் நினைவஞ்சலி



தோற்றம்: 31 — 07 — 1945

மறைவு: 25 — 07 — 2000

### அமரர் கிருபைரத்தினம் ஜெயசீலன்

(கிராம உத்தியோகத்தர்,
யா/371, துன்னாலை கிழக்கு)

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற
ஒரு கிழமை முன்னர் உலகவாழ்வில்
இருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டுமா?



தோற்றம்: 31 — 10 — 1956

மறைவு: 27 — 07 — 2000

### அமரர் றோமான் அன்ரனி

(கிராம உத்தியோகத்தர் யா/ 68 ஜெக்கிளமேசன் கிழக்கு)

கிராம உத்தியோகத்தர் சேவையின்
முதலாம் தரத்தினை
இளவயதில் பெற்றுக் கொண்டீர் உலக வாழ்வில்
இருந்து இளவயதில் ஓய்வு பெற்றுக்கொள்ள
வேண்டுமா?

தங்களை இழந்து துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
துயரில் பங்கேற்கும்

### யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்

68, பலாலி வீதி.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(77650)

உதயன்

## ஆக்கபூர்வமாக அமைய...

சகல துறைகளிலும் ஐம்பது வருடங்களுக்குப் பின்தள்ளப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு, இதற்கென விசேட நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

இப்படி ஒரு 'புதிய விடயத்தை' வடக்கு - கிழக்கு மாகாண உயர் அதிகாரிகள் கண்டுபிடித்துக் கூறிப் போயுள்ளார்கள். இதனை அவர்கள் சொல்லியே பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதல்ல. எல்லோருமே வெளிச்சமாகக் கண்ட விடயம் இது. சரியாகச் சொல்வதானால் தமிழர் பிரதேசம் நூறு வருடங்களுக்குப் பின்தள்ளப்பட்டுவிட்டது.

மாகாண சபையின் உயர் அதிகாரிகள் எல்லோரும் ஒரே தடவையில், பெரும் எண்ணிக்கையில் வந்து இங்கு சில நாள்கள் தங்கியிருந்ததால் விசேட நிதி தேவை என்பது புலப்பட்டதோ என்னவோ...! அடிக்கடி இங்கு வந்துபோயிருப்பின் இன்னும் எத்தனையோ நடைமுறைப் பிரச்சினைகளை நேரில் கண்டறிந்திருக்க முடியும்.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில், கடந்த பத்து வருடங்களாக ஏனைய மாகாண சபைகளுக்கு நிகராக வடக்கு - கிழக்கு மாகாண சபையும் இயங்கி வருகிறது என்பது வாத்ஸலவம்தான்.

ஆனால் அங்கெல்லாம் அள்ளிக் கொடுக்கும் அரசாங்கம் இங்கென்றதும் கிள்ளித் தெளித்து வருகின்றது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாத இடத்தில் ஏதோ ஒரு வகையில் அதனை நிரப்பும் வகையில் செயற்படும் அதிகாரிகள் அரசாங்கத்தின் இந்தப் பாகுபாட்டையும் ஓரளவேனும் வெளிப்படுத்தியிருக்கலாம்.

தேர்தலை அண்டி இவர்கள் இத்தனை பேரும் யாழ்ப்பாணம் வந்ததால் அவர்களது விஜயம் அரசியல் உந்துதலும் தேர்தலை நாடிய பின்னணியும் கொண்டது என்று மக்கள் அபிப்பிராயப்படுவதைத் தவிர்க்க முடியாது. அது ஒருபுறமிருக்க -

வடக்கு - கிழக்கில் ஒரு பெரும் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, அதனைப் புனர்நிர்மாணம் செய்வதோ அபிவிருத்தி செய்வதோ இயலாத காரியம். போர் தொடர்கிறது என்பதற்காக மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்குத் தேவையான பணிகளை முற்றாக நிறுத்தி விடுவது என்பதும் ஏற்கக்கூடிய ஒன்றல்ல. இந்த இரண்டு அம்சங்களுமே நிதர்சனமானவை; ஆயினும் ஒரு வகையில் ஒன்றுக்கொன்று முரணானவையுமாகும்.

இந்த இரண்டுக்கும் இடைப்பட்டு நின்றே அரசு வடக்கு - கிழக்குச் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. போரைத் தொடர்வதில் அரசாங்கம் அவ்வப்போது தீவிரமும் வேகமும் காட்டிவருவதால் வெளிநாடுகள் கூட வடக்கு - கிழக்குப் புனர்நிர்மாணத்துக்கும் அபிவிருத்திக்கும் நிதி உதவி வழங்கத் தயங்குகின்றன.

நாட்டின் வருமானத்தில் காற்பங்குக்கு மேல் போருக்காகச் செலவிட்டு, காசைக் கரியாக்கும் அரசாங்கம், போரை நிறுத்தி அந்தப் பணத்தை வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும்.

இத்தகைய கருத்துக்கள் சொல்வதற்கும் எழுதுவதற்கும் - அவற்றைக் கேட்பதற்கும் - நன்றாகவே இருக்கும். ஆனால் அவற்றைச் செயற்படுத்துவதற்கு மனதில் உண்மையான விருப்பம் வேண்டும்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்தனை காலமாகத் தங்களுக்கு வசதி வாய்ப்புக்களைத் தரும் ஆசனங்கள் கொண்ட சபையில் பல தடவைகள் கத்தியும் எதுவும் நடக்கவில்லை. ஆகையால் அதிகாரிகள் கூறும் யோசனை தென்னிலங்கைத் தலைமைப்பீடத்தின் காதில் விழப்போவதில்லை.

தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தமிழ் அதிகாரிகளுக்கும் சக்தியும் வலுவும் இருந்தால், வடக்கு - கிழக்கில் நடைபெறும் போரை நிறுத்துவதற்கு முதலில் அவற்றைப் பயன்படுத்தவேண்டும். வெறுமனே கருத்துச் சொல்வதனை விடவும் அதுவே பெரும் ஆக்கபூர்வமானதாக அமையும்.

### குருநகரில் ராணுவ வேலிக்குள் உள்ள

# 135 வீடுகளின் உரிமையாளர்கள் நிவாரணம் வழங்கக் கோருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஓக.25

குருநகர் பகுதியில் கடந்த நான்கு வருடங்களாக இராணுவ வேலிக்குள் இருக்கும் 135 வீடுகளின் உரிமையாளர்கள் தமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரி யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடம்பெயர்ந்த பின்னர் 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் எங்கள் கிராமத்துக்குத் திரும்பியபோது எமது 135 வீடுகளையும் சுற்றி இராணுவ வேலிகள் போடப்பட்டிருந்தன.

அன்று தொடக்கம் கடந்த நான்கு வருடங்காளக இருப்பிடங்கள் இன்றி உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றோம்.

இந்த 135 குடும்பங்களும் கடற்றொழில் செய்யும் குடும்பங்களாக இருப்பதனால் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன. எனவே எமக்குரிய புனர்வாழ்வு உதவிகளை விரைந்து வழங்குமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-5-10)

### ஆள்கள் இல்லாத சமயம்

# பட்டப்பகலில் வீட்டுக்கதவை கழற்றிய திருடர்கள் சிக்கினர்!

யாழ்ப்பாணம்,ஓக.25

பட்டப்பகலில் வீட்டுக் கதவுகளைக் கழற்றிக் கொண்டிருந்த திருடர் கோஷ்டியினர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்தவாரம் ஈச்சமோட்டைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆள்கள் இல்லாத வீடு ஒன்றில் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவத்தைக் கண்ட சிலர் அப்பகுதி இராணுவத்தினருக்குக் கொடுத்த தகவலை அடுத்து அங்கு சென்ற இராணுவத்தினர் திருடர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை -

யாழ்ப்பாணம் மடத்தடிப் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன் இரவுவேளை வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க 3 வானொலிப் பெட்டிகளைத் திருடிச் சென்றுள்ளனர். (ஜ-15-17)

# மிதிவெடியில் நாய் சிக்கியது அருகில் நின்ற இளைஞன் காயம்!

### உரும்பிராய்ப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.25

உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மிதிவெடி வெடிப்புச் சம்பவத்தில் கண்ணில் படுகாயம் அடைந்த நிலையில் இளைஞன் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த துரையன் திலீபன் (வயது 18) என்ற இளைஞனே காயமடைந்தவராவார்.

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் மாடுகட்டச் சென்ற சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தோட்டத்துக்கு அருகே மிதிவெடி அபாயம் என்ற அறிவித்தல் பலகை வைக்கப்பட்டிருந்ததாகவும்-

மிதிவெடி அறிவித்தல் எல்லைக்குச் சமீபமாக மாட்டைக் கட்டிக்கொண்டிருந்த சமயம் அபாயப் பகுதியூடாக நாய் ஒன்று ஓடிய போது அங்கு புதைக்கபட்டிருந்த மிதிவெடி ஒன்று வெடித்தது. இதனால் பிரஸ்தாப இளைஞனின் இடது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாயின் பின்னங்கால்களும் துண்டிக்கப்பட்டன. (ஜ-9-15)

# அந்தணர் குடும்பங்களுக்கு நிதிஉதவி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.25

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் இலங்கைக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்த அந்தணர் குடும்பங்களுக்கு நிதி வழங்கும் நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயரும் கலந்துகொள்வர்.

நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்குவார்.

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தென்மராட்சி ஒன்றியக் கிளைத் தலைவர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள், காயத்ரி பீட அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், நீர்வேலி கந்தசாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய விசேட குரு சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்கள், கோண்டாவில் காளிகோயில் பிரதம குரு சிவஸ்ரீ சிறீஸ்கந்தராஜக் குருக்கள், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராஜா ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றுவர். (க)

### உதயவாக்கு

**தனது உழைப்பின் மூலம் அனைவருக்கும் வாழ்க்கைக்குரிய வழியைத் தேடிக்கொள்வதற்கு உரிமையுண்டு. எனவே, ஒரு வழக்கறிஞன் வேலைக்கு எவ்வளவு மதிப்புண்டோ, அவ்வளவு, ஒரு நாவிதனின் வேலைக்கும் உண்டு.**

*- காந்தியடிகள்*

### பாதுகாப்புக்காக தனிப்படை அமைக்கிறார் வாசு

கொழும்பு,ஓக.25

நாடாளுமன்றத் தேர்தலில் தனக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளைத் தடுப்பதற்காக இளைஞர் படை ஒன்றை அமைக்கப்போவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார அறிவித்துள்ளார்.

ஆயுதங்கள் அற்ற நிலையில், எனினும் தைரியம், புத்திசாதுரியம் மிக்க இளைஞர்கள் இந்தப் படையில் இடம்பெறுவர் எனவும் -

தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படும்போது இந்தப்படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பர் எனவும்.

வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (இ-7)

### நாளை

**ஆவணி 10**

**சனிக்கிழமை**

*திதி:* துவாதசி
முன் இரவு 11.24 வரை
*நட்சத்திரம்:* புநர்பூசம்
முன் இரவு 11.03 வரை.
*வைஷ்ணவ ஏகாதசி விரதம்*
*சுபநேரம்:* 3.05 - 4.35
*ராகுகாலம்:* 9.05 - 10.35
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## நல்லூரிலிருந்து நமக்கருள் புரிவாய்!

தொல்லை வினை தீர்க்கும் தூயவனே
முருகா! முத்துக்குமரா!!
நல்லை யிலுறைந்து நமக்கருள்புரிவாய்
நல்லூரானே! ஞான வடிவேலா!!
இல்லை யெனாது வரமீந்தருள் செய்வாய்
வள்ளி தெய்வானை மணாளா!
கல்லை யுமுருக்கிடும் காட்சிதருபவனே
கலியுக வரதா!! கந்தப் பெருமானே!!

*- சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்*

## தீர்வேதும் இல்லையா? கந்தா!

நல்லை நகருறை நாதா — இந்த
நாடெல்லாம் போற்றிடும் வேதா
தொல்லை வினைகளை வேலா — உனைத்
தொழுவதே எம்பணி பாலா
அல்லல் மிகுந்தொரு வாழ்வா — தமிழன்
அகதியென் றேதினம் தாழ்வா?
வல்லமை தந்திடு வேலா — இந்த வடகிழக் கெங்களுக் கென்றே!

தீர்வுப் பொதியது போச்சு — இப்போ
தேர்த வென்றேதினம் பேச்சு!
நேர்மையும் நொந்திட வாச்சு — தமிழ்
நிமிர்ந்திட உன்வேலைப் பாய்ச்சு!
போர் என்றே எறிகணை வீச்சு — நாம்
போகங்கினால் நாடினி யார்க்கு?
தீர்வேதும் இல்லையா? கந்தா! — தினம்
செத்துக்கொண்டிருக்கிறோம் வரந்தா!

*- நயினை இராகுலன்*

## நலமளிக்கும் பெருவிழா

**நல்லூர்ப் பதியுறையும் முருகனுக்குத் திருவிழா
நாடிப் பணிபவர்க்கு நலமளிக்கும் பெருவிழா
பக்தியுடன் வணங்குவோர்க்கு பதம் அளிக்கும் முருகா
பாதம் பணிந்து வணங்குகின்றோம் குறை தீராய்.**

**தமிழ் மக்கள் இம்மண்ணில் தாங்கும் துயரங்களை
தமிழ்ச் சங்கத் தலைவா நீ அறிந்திருத்தல் நன்றோ
தாழ்வுற்ற எம்மக்கள் வாழ்வதனை வளமாக்கி
தடையற்ற வாழ்வதனை வழங்கிடப்பா முருகா.**

*- கண ஜீவகாருண்யம்*

## உலகம் உழலா தருள்வாயே

| | | |
|---|---|---|
| முக்கட் | சிவனார் | தருபாலா |
| முதலே | எங்கள் | முருகோனே |
| திக்கற் | றுலகம் | திசைமாறி |
| தினமும் | உழலா | தருள்வாயே |
| செக்கச் | சிவந்த | வடிவேலா |
| திகழும் | வள்ளி | மணவாளா |
| மக்கள் | பரவும் | மயிலோனே |
| வளரும் | நல்லைப் | பெருமானே |

*- வ.சின்னப்பா*
(தனங்களப்பு)

## அமைதி தாருமையா!

நல்லை நகரி லுறைபவனாம் — கந்தன்
தொல்லைகள் தீர்த்திடும் சுந்தரனாம்
சொல்லி யழுதிடும் பக்தரின் குரல்கேட்டு
துள்ளி வந்துதுயர் தீர்ப்பவனாம்

செல்லப்பனுக் கருள் செய்த வனாம் — எங்கள்
பொல்லாப்புத் தீர்த்திடும் புண்ணியனாம்
கல்லா மனத்துக் கடைப்பட்ட பேரையும்
சொல்லாற் தொழுதிட வைப்பவனாம்

ஆறு மலர்களில் உதித்தவனாம் — அன்னை
அணைத்ததினாற் கந்தன் ஆனவனாம்
மாறுபடு சூர சேனையை வதைத்தங்கே
ஏறு மயிலாக்கிக் கொண்டவனாம்
நாடு நகரினை நாமிழந்து — தெரு
நாய்களைப் போலவே நாமலைந்து
ஓடிட வைத்தது போதுமையா எம்முன்
ஓடி வந்தமைதியைத் தாருமையா.

*- கவிமணி அன்னைதாசன்*

# வன்னி வாக்காளரில் 40 வீதமானோர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில்!

வவுனியா,ஓக.25

வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கான மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 40 சதவீதமான வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருப்பதாகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா,மன்னார்,முல்லைத்தீவு ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய வன்னி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட இரண்டு இலட்சத்து 13 ஆயிரத்து 81 வாக்காளர்களில் 85 ஆயிரத்து 471 பேர் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ளனர்.

முல்லைத்தீவுத் தொகுதியில் பதிவுசெய்யப்பட்ட 53 ஆயிரத்து 24 வாக்காளர்களில் வெலிஓயா பிரதேசத்தில் உள்ள 936 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ளனர்.

மன்னார் தொகுதியில் உள்ள 68 ஆயிரத்து 408 வாக்காளர்களில் 55 ஆயிரத்து 550 பேரும், வவுனியா தொகுதியிலுள்ள 91 ஆயிரத்து 589 வாக்காளர்களில் 71 ஆயிரத்து 106 வாக்காளர்களும் விடுவிக்கப்படாத பிரதேசத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவுத் தொகுதியில் 98 வீதமும், மன்னாரில் 19வீதமும், வவுனியாவில் 22 வீதமும் என விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வன்னி மாவட்ட வாக்காளர்கள் வசிக்கிறார்கள். (ஐ-5)

# மனித உரிமைகள் அலுவலகத்தை நகரில் இயங்க வைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.25

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தை வேலை நாள்களில் ஒரு சில மணி நேரங்களாவது சோமசுந்தரம் அவெனியுவில் உள்ள அதன் நிரந்தர அலுவலகத்தில் இயங்கச் செய்ய வேண்டும் எனக்கோரி யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.நகரில் சோமசுந்தரம் அவெனியுவில் இயங்கி வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிரதேச செயலகம் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களினால் யாழ்.நகரிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வலி.மேற்குப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை போன்ற தூர இடங்களில் இருந்துவரும் மக்கள் சுமார் 45 கிலோ மீற்றர் தூரம் சென்று இந்த அலுவலகத்தை அடைய வேண்டியுள்ளது.

தற்போதைய போக்குவரத்து வசதியீனம் மற்றும் ஊரடங்குச்சட்டம் போன்றவற்றினால் தூர இடங்களில் வசிப்பவர்கள் இந்த அலுவலகத்துக்கு ஒரு நாளில் வந்து செல்ல முடிவதில்லை.

இதனால் ஆணைக்குழுவின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரை வேலை நாள்களில் இந்த அலுவலகத்துக்கு சமுகமளிக்கச் செய்து முறைப்பாடுகளைப் பதிவு செய்யவேண்டும். இந்த அலுவலகத்துக்கு அண்மையிலுள்ள யாழ். செயலகம் உட்பட பல அலுவலகங்கள் தற்போது இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இப்படி அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-10)

# "யாழ்ப்பாணக் காவியம்" நூல் சம்பந்தன் விருதுக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஓக.25

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நினைவாக வருடாந்தம் வழங்கப்படும் 'சம்பந்தன் விருது' இம்முறை பண்டிதர் க.சச்சிதானந்தன் எழுதிய 'யாழ்ப்பாணக் காவியம்' நூலுக்குக் கிடைத்துள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி நடைபெறும்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் வி. கே.கணேசலிங்கம் பண்டிதமணியின் நினைவுரையை நிகழ்த்துவார். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா சம்பந்தன் ஞாபகார்த்த உரையையும், பேராசிரியர் அ.சண்முகதாஸ்,மூதறிஞர் சொக்கன் ஆகியோர் பண்டிதர் க.சச்சிதானந்தன் பற்றிய பாராட்டுரைகளையும் நிகழ்த்துவர்.

சம்பந்தன் விருதுக்கு நூலைத் தெரிவு செய்வது தொடர்பான குழுவின் கூட்டம் யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில் அண்மையில் நடைபெற்றது.

கலாநிதி க. குணராசா, பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஆசிரியர் அ. பஞ்சாட்சரம், இலங்கை வங்கி முகாமையாளர் கே.குமாரலிங்கம், மூதறிஞர் சொக்கன் ஆகியோர் குழுவில் அங்கம் வகித்தனர்.

சம்பந்தன் விருதுக்கான நிதி உதவியை சம்பந்தனின் மகள் திருமதி திரிவேணி கஜரோகணன் வழங்குவார். (ஐ-7)





கடந்த சனியன்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்த வடக்கு -கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி தீவுப் பகுதியில் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தை அமுலாக்குவது குறித்து நெடுந்தீவு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம் அருகில் அமர்ந்துள்ளார்.

சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி குறித்து நெடுந்தீவு மேற்கு ஐக்கியதீப சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களுடன் கலந்துரையாடியபின்னர் மாகாண பிரதம செயலாளர் மேற்படி நிர்வாக சபை உறுப்பினர்களுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்தை இரண்டாவதாகக் காணலாம். (ஐ-7)

## அமைச்சரைச் சந்திக்க பீடாதிபதி மறுப்பு

கொழும்பு,ஓக.25

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராகப் பதவியேற்றுள்ள விளையாட்டுத் துறை அமைச்சா எஸ்.பி.திஸநாயக்காவைச் சந்திக்க மல்வத்த பீடாதிபதி ரம்புக்வெல்ல ஸ்ரீவிபாஸிதேரர் மறுத்துள்ள்ளார்.


மகாநாயக்கரைச் சந்திக்க அமைச்சர் திஸநாயக்கா விரும்புவதால் அதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு மத்திய மாகாணசபையின் அரசு ஆதரவாளர்கள் இருவர் மல்வத்த பீடாதிபதியைச் சந்தித்துக் கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்க மல்வத்த பீடாதிபதி மறுத்துவிட்டார்.

இதனையடுத்து அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்திக்க அமைச்சர் திஸநாயக்கா முயற்சி மேற்கொண்டுள்ளார் எனக் கூறப்பட்டது. (இ-3-20-186)

## 100 ஆவது நாள் நினைவலைகள்

தோற்றம்
03
—
09
—
1981



மறைவு
17
—
05
—
2000

### சர்வசக்திவேல் கோகுலநாதன்
(கண்ணன்)

(யாழ்/மத்திய கல்லூரி உயர்தர கணிதப்பிரிவு மாணவன் 2000)

எங்கள் அன்புக் கண்ணா எங்களையெல்லாம்
மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு - நீ
இன்று மீளாத்துயில் கொள்கின்றாயே!
கடைக்குட்டியைக் காணாது அப்பா தவிக்கும்
தவிப்பு எப்பதான் நீ அறிவாயோ?
படிக்கப்போய் திரும்பிவர பிந்தினால்
அம்மா படும்பாடு அறிவாயோ?
உன் உடன் பிறப்புக்கள், நண்பர்கள், உறவினர்கள்
கதறியழும் அழுகைச் சத்தத்திற்கேனும் செவி சாய்க்காயோ?
கண்ணா நீ கண்ணால் சிரிப்பதும் எம்மையெல்லாம்
குலுங்கக்குலுங்க சிரிக்க வைப்பதும் எங்கள் கண்முன்னே
நிற்கிறது.

இன்று எம் எல்லோரையும் கதறியழவிட்டு
இறைபதம் தேடிச் சென்றதேனோ?

**உனது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

மேலும் எமது குடும்பச் செல்வனின் பிரிவுச் செய்தியறிந்து நேரில் வந்தும், கடிதம், பத்திரிகை, துண்டுப்பிரசுரம் மூலம் எமக்கு ஆறுதல் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள், யாழ்/மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

தற்காலிக முகவரி:
*இல. 12D, யோகபுரம்,*
*மல்லாவி.*

நிரந்தர முகவரி:
*கைதடி மேற்கு,*
*கைதடி.*

(77573)

NIRU
TUTION CENTRE
KONDAVIL
A/L 2002
CHEMISTRY
வெப்ப இரசாயனம்
THERMO CHEMISTRY
ஆரம்பம்: 26-08-2000
சனி 4.00pm.
N.மகேஸ்வரன்
(77605)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
23
—
09
—
1957



மறைவு
26
—
07
—
2000

### திருமதி றோஸ்மலர் குலம்

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட திரு விளக்கே!
மாதம் ஒன்று சென்றதம்மா - ஆனால்
மாறவில்லை எம் துயரம்
பொறுமையின் உறைவிடமாய்
நேர்மையின் புகலிடமாய்
புன்னகையின் இளவரசியாக
பூமிதன்னில் வலம் வந்தாய்
கண்டவரைக் கவர்ந்திடும்
எழில் கொண்ட உன்வதனம்
காலன் அவன் கவர்ந்திட்ட
காரணத்தை யாரறிவார்?
ஆலமரம் போலானீர் - அதில்
ஆயிரம் பேர் இளைப்பாற
காலன் அவன் பொறுக்காமல்
கவர்ந்தானோ அம்மா உம்முயிரை?
எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற் செல்லும் - நாம்
அழுதாலும் தொழுதாலும்
அதில் ஓர் எழுத்தும் மாறாதே
என்றான் ஒரு கவி அன்றொருநாள்
இன்றோ நாம் அதன் பொருளுணர்ந்து
துவளும் நெஞ்சத் துயரகற்றி
துலங்கும் உங்கள் நினைவுடனே
வாழ்கின்றோம் இப்புவிதனிலே!

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள்,**
**குடும்பத்தினர்.**

*இலந்தைக்காடு,*
*சமரபாகு,*
*வல்வெட்டித்துறை.*

(77587)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் அரசு பகல் ஒரு கொள்கை; இரவு ஒரு கொள்கை

*தேர்தல் நெருங்கிவரும் வேளையில் ஜனாதிபதியும் மூத்த அமைச்சர்களும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு மக்களைக் குழப்புகிறார்கள். இந்நிலையில் சுய புத்தியுடன் சிந்தித்து, சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து விடுபடுவது மக்களின் கடமையும் பொறுப்புமாகும் எனத் தெரிவிக்கிறார் "இரிதா பெரமுன" பத்திரிகையின் ஆசிரியர். அந்தப் பத்திரிகையின் கடந்த வார இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.*



சந்திரிகா

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாங்கள் வெற்றிபெற்று இரண்டு மாதங்களுக்குள் இந்த அரசமைப்புத் திட்டத்தை நிறைவேற்றி, விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை மீட்டு, நாட்டில் அமைதியை உருவாக்குவேன் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த 11ஆம் திகதி தேசிய தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேட்டி கடந்த 16ஆம்



மகிந்த ராஜபக்ஷ

திகதி தேசிய தொலைக்காட்சி சேவையில் மீண்டும் ஒளிபரப்பானது.

இதை ஒத்த கருத்துக்களை ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர்களான தபால், தொலைத் தொடர்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, இளைஞர் விவகார, சமுர்த்தி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க, வடபகுதி அபிவிருத்தி மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபன அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த விஜேசேகர ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

இந்த அமைச்சர்களின் கருத்துப்படி எதிர்வரும் தேர்தலில் தமக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி அரசமைப்புத் திட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர அவர்களது அரசு எண்ணியுள்ளது.

ஜனாதிபதியும் அவரது நெருங்கிய சகாக்களும் இவ்வாறு தெரிவிக்கையில் தற்போதைய அரசின் பிரதம மந்திரி ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவும் இதற்கு நேர்மாறான கருத்தை வெளியிட்டுள்ளனர்.

"சிங்கள இனத்தவர்களான நாங்கள் செல்வதற்கு உலகில் வேறு நாடுகள் எவையுமில்லை. இந்த நாட்டில் சுதந்திரமாக வாழும் உரிமை எங்களுக்கு இருக்க வேண்டும். சிங்கள இனத்துக்கும், பௌத்த மதத்துக்கும் இடையூறாக இருக்கும் எந்த விடயமாயினும் அதை என்னிடம் எடுத்துக் கூறுங்கள். நான் அவற்றிற்கு இடமளிக்க மாட்டேன். நான் அன்றும் இன்றும் பயங்கரவாதத்துக்கு எதிரானவன். பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தாலேயே ஒழிக்க வேண்டும்" எனப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கண்டியில் ராஜோபவனா ராமயாவில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார் என 'திவயின' நாளிதழ் கூறுகிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்றி அரசமைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்துப் பேசுவது ஒரு பாஸிஸவாத எண்ணமாகும் என அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ 'ராவய' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

**தமிழில் :- கஜனி**

அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் எவரும் இந்தக் கருத்துக்களுக்கிடையேயான முரண்பாடுகளை கண்டறிய முடியும்.

ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமானவர்களும் வடபகுதி மக்களுக்காக சமாதானத்தை உருவாக்குவதற்கும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் அரசமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையற்றது எனவும் அவர்கள் கூறுகின்றனர். அதே அரசாங்கத்தைச் சேர்ந்த - மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான - மீன்பிடி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவோ அவ்வாறான எண்ணம்



திஸநாயக்க

பாஸிஸவாத முயற்சி எனக் கூறுகிறார்.

ஆனால் பிரதமர் வெளியிடும் கருத்தோ இந்த இரு தரப்பினரது கருத்துக்களுக்கும் முற்றிலும் மாறுபட்டதாகும். அதாவது தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் ஏதுமில்லை எனவும், வடபகுதி யுத்தம் அல்லது பயங்கரவாதத்துக்குப் பயங்கரவாதம் மூலமே பதிலளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கிறார்.

அரசாங்கத்தின் உயர்மட்ட அமைச்சர்கள் வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக்கள் பெரும்பான்மையின மக்களைக் குழப்புவதாக அமைந்துள்ளன. இந்தக் கருத்துக்கள் மூலம் அரசாங்கத்தின் கொள்கைதான் என்ன என்பதைக் கண்டறிய மக்களுக்கு கடினமாகவுள்ளது.

அரசியல்வாதிகள் பலர் தெரிவிக்கும் கருத்துக்கள்போல் தாங்கள் அவ்வாறு கருத்து வெளியிடவில்லை எனவும் இவையாவும் பத்திரிகையாளர்களால் திரித்து வெளியிடப்பட்ட கருத்துக்கள் எனவும் இந்த அரசியல்வாதிகள் சில வேளைகளில் கூறக்கூடும். அது வேறு பிரச்சினையாகும்.

பத்திரிகைகளில் வெளியான தகவல்கள் தவறு என இதுவரை எந்தவொரு அமைச்சரும் தெரிவிக்கவில்லை. எனவே இந்தக் கருத்துக்கள் எதனை எடுத்துக் காட்டுகின்றன? ஒன்றில் அரசாங்கத்திடம் கொள்கை எதுவுமில்லை; அல்லது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரசுக்குள் முரண்பாடுகள் உள்ளன; அதுவுமில்லையேல் இவை அனைத்தும் மலிவான தேர்தல் குண்டாகும்.

எது எவ்வாறாயினும் அரசின் கொள்கை ஒரு சீரானது அல்ல என்பதையும் எப்படியேனும் தேர்தலில் வெல்ல வேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்தையே அது கொண்டது என்பதும் தெளிவு.

தற்போது அரசுக்கு சர்வதேச உதவிகள் கிடைப்பதில்லை. எனவே சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதை ஜனாதிபதியும் அவரின் நெருங்கியவர்களும் செய்துவருகின்றனர்.

இதற்கிடையில் பொதுத்தேர்தல் மிக விரைவில் நடைபெறவுள்ளது. அரசமைப்புச் சீர்திருத்தத் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றதன் காரணமாக சிங்களத் தீவிரவாதச் சக்திகளின் எதிர்ப்பை தேர்தலின்போது சமாளிப்பது அரசுக்கு கடினமான காரியமாகும். இந்த எதிர்ப்பைச் சமாளிக்க ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது அந்தத் தீவிரவாத சக்திகளுடன் ஒத்துப்போவது போன்ற கருத்தை வெளியிட வேண்டும். பிரதமர் தற்போது அதையே செய்கிறார்.

இது பகல் ஒரு கொள்கை: இரவு ஒரு கொள்கை என்பதற்கு ஒப்பானது அல்லவா?

நாடு பாரதூரமான அரசியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதற்கும், நாடு இந்த



ரத்னசிறி

ளவு தூரத்துக்கு அபாய நிலைக்குத் தள்ளப்பட்டதற்கும் காரணம் இதுவரை நாட்டை ஆண்ட அரசுகளின் அரசியல் கொள்கைகளில் ஏற்பட்ட தவறுகளே ஆகும்.

நாட்டு மக்களைக் குழப்புவதற்கும், அவர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்வதற்கும்



மங்கள சமரவீர

இந்த அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாத குறுக்கு வழிகளைப் பயன்படுத்த முனைகிறார்கள். தற்போது சுயபுத்தியைப் பயன்படுத்தி இந்தக் குறுக்கு வழிகளில் இருந்து விடுபடுவது மக்களின் கடமையும் பொறுப்புமாகும். அது எதிர்காலப் பரம்பரைக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் நற்பயனை அளிக்கும். ★

# கலைகளை வளர்ப்பதில் இளம் தலைமுறை நாட்டம் நெடுந்தீவில் இன்று மற்றொரு பாரம்பரிய நிகழ்வு

நெடுந்தீவில் இன்று வெள்ளிக்கிழமை "பொன்னூல் செபமாலை" நாட்டுக் கூத்து மேடையேற்றப்படுகின்றது.

நெடுந்தீவு சென்.அன்ரனீஸ் நிலா ஜோதி முத்தமிழ் நாடகமன்றத்தின் அண்ணாவியார் ச.தேவசகாயம் பிள்ளையின் வழிகாட்டலில் டொ. இராசநாயகத்தின் நெறியாள்கையில் இந்த நாட்டுக்கூத்தினை மேடையேற்றுகின்றனர்.

தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் நாட்டுக்கூத்துக்களை இளைய தலைமுறையினர் மத்தியில் ஊடுருவச் செய்யும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதம் அண்ணாவியார் சைமன் ஜேசுதாசனின் நெறிப்படுத்தலில் மேடையேற்றப்பட்ட "பூதத்தம்பி" நாட்டுக்கூத்து மற்றும் அதேமாதம் அண்ணாவியார் யாக்கோபு அடைக்கலமுத்துவின் நெறிப்படுத்தலில் மேடையேற்றப்பட்ட "ஆட்டுவணிகன்" நாட்டுக்கூத்து. அண்ணாவியர் டொ.இராசநாயகத்தின் நெறிப்படுத்தலில் இன்று மேடையேற்றப்படும் "பொன்னூல் செபமாலை" நாட்டுக்கூத்து என்பன நெடுந்தீவு மண்ணில் நாட்டுக்கூத்துக்கு ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி வெளிப்பாடு என்றுதான் கூறவேண்டும்.

அந்நிய நாகரிகத்தின் வருகையைப் பின்பற்றி பாரம்பரியக் கலைகள் பலவும் வழக்கொழிந்து மறைந்து விடுமோ என்ற பய உணர்வு எழுந்துள்ள இந்த வேளையில் - தமிழர் தம் பாரம்பரியக்கலைகளை, வளரும் இளைய தலைமுறையினர் மத்தியில் நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் நெடுந்தீவில் தொடர்ச்சியாக நாட்டுக்

## நாட்டுக் கூத்துக்களுக்கு தீவகத்தில் ஒரு மறுமலர்ச்சி

கூத்துக்கள் மேடையேற்றப்படுகின்றன.

மேற்படி கூத்துக்கள் அனைத்திலும் இளமையும், துடிப்பும் மிக்க இளம் கலைஞர்கள் பங்குபற்றி தமது ஆற்றலை வெளிப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அனுபவமும், ஆற்றலும் மிக்க அண்ணாவிமார்கள் பலரும் இந்த உலகைவிட்டு மறைந்த நிலையிலும் அவர்கள் பணி தொடருவோம் என இளையசமுதாயம் ஒன்று நெடுந்தீவில் உருப்பெற்றுள்ளது.

இன்று மேடையேற்றப்படும் "பொன்னூல் செபமாலை" நாட்டுக்கூத்திலும் ஞா.அமலோற்பவதாஸ் (கட்டியக்காரன்), சி.வேதநாயகம் (பாலராசன்), ஆ.ஞானராஜா (வலேந்திரியான் I), பா.ஜேக்குமார் (வலேந்திரியான் II), ம.ஜேம்ஸ் (மந்திரி), ப.அந்தோனிமுத்து (சேனாதிபதி), யோ.மரியதாஸ் (சேனாதிபதி), ஜே.ஜெயரூபன், ச.தோமஸ்செல்வராஜ், தே.இசக்கியேல் (பாலசூரியன் I,II,III), லோ.தயாநிதி (பாலராசன் மனைவி), ஆ.சகாயமலர், (வலேந்திரியான் மனைவி) ச.மெடொனா, ம.டயானாக்குயின் ரோஸ் (மனோரஞ்சிதம் I,II), வி.கொன்சலா (தோழி), அ.செல்லமணி (மந்திரவாதி), ச.மரியாம் பிள்ளை (செட்டி), ச.மரியதாஸ் (இடையன்), ம.சந்திரன் (திருடன்), ச.லோப்பையா(சாத்தான்), தீ.ஞானராசா(குரு), வே.அன்ரனீஸ்தியாகரன் (வேடன்), ஞா.அருள்ராஜ்(சேவகன்), ம.ஜஸ்மி(சம்மனசு) ஆகிய இளமையும், துடிப்பும் மிக்க கலைஞர்கள் இடம்பெறுகின்றனர்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் அதன்வழிவந்த கலைகளின் வளர்ச்சிக்கும் கிறிஸ்தவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. அவற்றுள்ளும் தமிழ்த்தந்தையும் தமிழாராய்ச்சி மாநாட்டின் முன்னோடிகளில் ஒருவருமான தவத்திரு தனிநாயகம் அடிகள் பிறந்த நெடுந்தீவு மண்ணில வாழும் கிறிஸ்தவர்கள் கலைக்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணிக்கும் தன்மை வாய்ந்தவர்கள்.

அதிலும் சமயம் சார்ந்த கூத்துக்கள் என்றால் நெடுந்தீவு வாழ் கிறிஸ்தவர்களுக்கு பெரும் கொண்டாட்டம். சமயநிகழ்வுகள் வெறும் சடங்குகளாக மட்டும் அமையாமல் மனித வாழ்க்கைக்குரிய எத்தனையோ விழுமியமான கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டும் என்பதில் அவர்களுக்கு பெரும் விருப்பம் உண்டு. இந்த வகையில் நெடுந்தீவில் இன்று மேடையேறும் "பொன்னூல் செபமாலை" நாட்டுக்கூத்தும் சமயக்கருத்துக்களைக் கூறுவதுடன் சமயவாழ்வு எது என்பதையும் கூறி நிற்கின்றது. இன்று மேடையேறும் இக்கூத்தின் கதைச்சுருக்கம் இது தான் :-

சொர்ணமாபுரி என்னும் நாட்டை பாலராசன் என்பவன் மனைவி, மகன் பாலசூரன், மந்திரி, சேனைத் தளபதி, காவலர்கள் புடைசூழ நல்லாட்சி புரிந்துவந்தான். பாலராசன் சொர்ணமாபுரியை ஆட்சிசெய்த சமகாலத்தில் சிற்றரசனான வலேந்திரியான் என்பவன் மனைவி, மகள் மனோரஞ்சிதம், மந்திரி, தளபதி சகிதம் தனது நகரை ஆட்சிபுரிந்து வந்தான்.

பேரரசனான பாலராசனுக்கு சிற்றரசன் வலேந்திரியான் திறை செலுத்தி வருபவன். ஆனால் நீண்டகாலமாக அவன் திறைசெலுத்தாத காரணத்தினால் தன்தளபதியை அனுப்பி திறைகேட்கின்றான் பாலராசன். திறை செலுத்தமறுத்த வலேந்திரியான் போர்புரிய ஆயத்தம் செய்கின்றான். தளபதிகள் தலைமையில் நடந்த யுத்தத்தில் பாலராசனின் தளபதி தோல்வியடைகின்றான். இதை அறிந்த பாலராசன் அன்னை மரியதாயிடம் அருள் வேண்டி நிற்கின்றான்.

**இ.நித்தியானந்தன்**
**(கலாசார உத்தியோகத்தர் நெடுந்தீவு)**

மரியதாயின் அருளால் தேவதூதன் மூலமாக "பொன்னூல் செபமாலையும், மந்திரவாளும்" பாலராசனுக்குக் கிடைக்கப்பெறுகிறது. அதன்பின்னர் பாலராசன் வலேந்திரியானோடு யுத்தம் புரிந்து வலேந்திரியானைத் தோற்கடித்து காட்டுக்குத் துரத்துகின்றான்.

மனைவி மகளோடும் பரிவாரத்தோடும் கானகம் சென்ற வலேந்திரியான் கொள்ளைத் தொழிலில் ஈடுபடுகின்றான். இது இவ்வாறு இருக்க, பாலராசனின் மகனான பாலசூரன் தனது தாய், தந்தையிடம் வேட்டையாடச்செல்ல அனுமதி

(8ஆம் பக்கம் பார்க்க)

# உளநலம் குன்றியோரைப் பராமரிக்க தனியான விடுதி அமைக்கப்பட வேண்டும்

## மக்கள் குறைகேள் செயலமர்வில் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் உளநலம் பாதிக்கப்பட்டவர்களை பராமரிப்பதற்கான நிலையம் ஒன்றை அமைப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்படவேண்டும் என்ற கோரிக்கை அண்மையில் இடம் பெற்ற மக்கள் குறைகேள் செயலமர்வில் முன்வைக்கப்பட்டது.

உளநல சங்கப் பிரதிநிதிகள் இந்நிலையம் அமைக்கப்படுவதன் அவசியம் பற்றி குறைகேள் செயலமர்வில் சமூக சேவைகள் பகுதியினர் மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியினர் ஆகியோருக்கு மகஜர்களையும் கையளித்துள்ளனர்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம், இடம் பெயர்வுகள் காரணமாக உளநலம் பாதிக்கப்பட்டோர் பலர் உறவினர்களினால் பராமரிக்கப்படாத நிலையில் உள்ளனர். இத்தகையோரைத் தங்க வைத்துப் பராமரிக்க நிலையம் ஒன்று அமைக்கப்படுவது அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-86)

# ஜே.வி.பி உறுப்பினர் பலியான சம்பவம் குறித்து விசாரணை!

## பொலீஸாருக்கு ஜனாதிபதி பணிப்பு

கிருலப்பனையில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாகவும், அதன் காரணமாக மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் பாரபட்சமின்றி விசாரணையை நடத்தி இத்தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்த உடனடி நடவடிக்கையை எடுக்கு மாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குக்குப் பணித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா 21ஆம் திகதியிட்டுப் பொலீஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தின் பிரதியொன்றைப் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்கும் சமர்ப்பித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இவ்விவகாரத்தை நேரடிக் கவனத்தில் எடுத்து பொலீஸ்மா அதிபருடன் ஆலோசனை நடத்தியதன் பின்னரே உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

விசேட ஊடகத்தகவல் நிலையம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இம்மாதம் 19 ஆம் திகதி கிருலப்பனை பிரதேசத்தில் பிரசாரக் கடமைகளில் ஈடுபட்டிருந்த ஓர் அரசியல் கட்சியினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும், இத்தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு நபர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டின் வேறுசில பகுதிகளிலும் அரசியல் கட்சிகளுக்கிடையில்மோதல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதரவாளர்கள் மீது கடந்த 19ஆம் திகதி கிருலப்பனையில் வைத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதைச் செய்தது 'எஸ்.பியின் குழு' எனவும் ஊடகங்கள் மூலம் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. சில சக்திகள் அரசுக்கு அவப் பெயரைத் தேடித்தரவே இதனைச் செய்துள்ளன.

தாக்குதலில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு ஜனாதிபதி பொலீஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசுக்கு எதிரான சில சக்திகள் திட்டமிட்டு இதுபோன்ற செயல்களில் ஈடுபடத் தொடர்ந்தும் முனையலாம் என்பதால் பொலீஸார் மிக விழிப்புடன் செயற்படவேண்டுமெனவும் பொலீஸ்மா அதிபரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-6)

## பட்டதாரி பயிலுநர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.25

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் தெரிவுக்காக இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் மீள் நேர்முகப் பரீட்சைகளில் பட்டியலில் பெயர் குறிப்பிடாத - ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதத்துடன் சமுகமளிக்கலாம் என வடக்கு - கிழக்கு மாகாணக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(ஐ-7-9)

## இரு தினங்கள் நடைபெறவுள்ள பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள பரீட்சைகள் பற்றிய விவரங்கள் யாழ்.கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண நூலகர் சேவை தரம்II, தரம்III, ஆகியவற்றுக்கான வினைத்திறமைக்கான தடைப்பரீட்சை மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்புக் (வெளிவாரி, கொழும்பு பல்கலைக் கழகம்) கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்கான பரீட்சை என்பன ஞாயிற்றுக்கிழமையும் -

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் சாரதி வகுப்புII 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன.

சகல பரீட்சையாளர்களுக்குமான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-10)

# மீன் பிடியியல் டிப்ளோமா இறுதிப் பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த முதலாவது அணியினரின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பெறுபேறுகளின்படி 13 பேர் திறமைச்சித்தி பெற்றுள்ளனர். 30பேர் சாதாரண சித்தி பெற்றுள்ளனர்.

திறமைச்சித்தி பெற்றோர் விவரம் வருமாறு:-

ஜே.அமலநாதன், எஸ்.ஏ.ரவிராஜ், எஸ்.அருணன், வி.மெல்காறொசானி, கே.பரமேஸ்வரன், எம்.பிரதீஸ், கே.பிரபலோஜினி, ஏ.பிரான்சிஸ் அன்ரனீஸ், கே.றொக்சன் ஜெகன், ஏ.சிவநந்தினி,பி.சிவகரன்,ஆர்.சிவதர்சினி, ரி.தவரட்ணம்.

சாதாரண சித்தி பெற்றோர் விவரம் வரமாறு:-

ஏ.அருள்ஜெயரட்ணம், ஏ.எஸ்.டிலான்,எவ்.எவ்.மெரில்கிறேவியர், எஸ்.யசோதரன், எஸ்.ஜீவதுளசி, ரி.கலையமுதன், பி.கோகுலன், ஏ.எம்.நற்கருணைராஜா, எஸ்.நியூட்டன், பி.பிறேம்குமார், ஆர்.பிரசன்னா, ரி,புதியராஜா.

ஆ.ராஜ்பவன், வி.ரட்ணகாந்தன், ஆர்.ராசேயந்தன், ஏ.சேந்தன், எஸ்.சிவமதன்,பி.தயாளன்,எஸ்.தயாளினி, ஆ.துளசிகா,ஆர்.எம்.துஷ்யந்தி, எஸ்.ரூபேந்திரன், கே.முகுந்தன்.

எஸ்.பாலமுரளி, ஜி.சிவதரன், கே.முரளிதரன், கே.வாணி, எஸ்.ஸ்ரீகிருஷ்ணன், ரி.நிர்மலன், கே.மோகனதாஸ். (ஐ-7)

# உதித்தனன் முருகன் உலகம் உய்ய

அண்ட சராசரங்கள் அல்லது பிரபஞ்சத்தின் கால அட்டவணைப் படி பூமி அல்லது யுகத்தின் காலம் கிருதாயுகம்; திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் எனப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் ஒவ்வோர் யுகங்களும் இத்தனை வருடங்களைக் கொண்டுள்ள தெனவும் அறியக்கிடக்கிறது. தற்போது நடப்பது கலியுகம் இதற்குமுந்திய துவாபரயுகத்தில் மக்களின் அறிவு, ஆற்றல் குன்றியிருந்து, வித்தைகள் முறையாக வெளிப்படவில்லை. இதனால் இந்த உலகின் மூலகாரணத்தை அவர்களால் தெளியவும், அறியவும் முடியவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் காரணம் காட்டி வாதாடினார்கள்.

பரம்பொருளான இறைவனே மூலகாரணன் என்பதை எவரும் உணரவில்லை. இதனால் தேவர்கள் அனைவருக்கும் அவரவர்களுக்குரிய அதிகாரங்கள், கடமைகள் எவை என்பதே தெரியாமல் பெரும் குழப்பம் ஏற்பட்டது. இதனால் பரமேஸ்வரனான பரம்பொருளிடம் திருமால், நான்முகன் உட்பட்ட தேவர்கள் சென்று முறையிட்டார்கள். அப்பொழுது பரமேஸ்வரன் "திருமாலே! நான்முகனே! நீங்கள் இருவரும் ஒவ்வொரு துவாபர யுகத்திலும் பூலோகத்தில் வியாசராகவும் மனுவாகவும் அவதாரம் எடுத்து வேதசாஸ்த்திரங்களின் சாரங்களை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள் பிரம்மத்தை நன்றாக அறிவிக்கும்படியாக ஏனைய முனிவர்களுடனும் தபசிகளுடனும் சேர்ந்து விளக்கமளியுங்கள் என்று கூறினார். அதன்படி அவர்கள் அவ்வாறு செயற்பட்டார்கள்.

இது இவ்வாறு இருக்க திருக்கைலைமலையில் பரமசிவனான சிவபெருமானை நோக்கி அவரது பத்தினியான தாட்சாயணிதேவி பின்வருமறு கூறினார். "எனது தந்தையாகிய தக்கனால் நான் அவமதிக்கப்பட்டதால் தாட்சாயணி (விலக்கப்பட வேண்டியவள்) என்ற பெயரைப் பெற்று அவமானப்படுகின்றேன். இந்தப் பிறவி எனக்கு வேண்டாம் வேறு எங்காவது பிறவி எடுக்கும்படியான வரத்தை எனக்கு அருளுங்கள்" என்றாள்.

சிவபெருமான் முகமலர்ந்து "மலையரசனுக்கும் அவன் மனைவியாகிய மேனைக்கும் நீ மகளாக திருஅவதாரம் செய்வாய்" என விடைகொடுத்து அனுப்பினார்.

பார்வதிதேவியைப் பிரிந்த சிவபெருமான் திருக் கைலையிலே ஆலமரத்தின் அடியில் அமர்ந்து தட்சணாமூர்த்தி வடிவத்தில் சனகர் முதலான முனிவர்களுக்கு ஞான ரகசியங்களை விளக்கத் தலைப்பட்டார். அச்சமயத்தில் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் போன்ற அசுரர்களின் கொடுமைகளிலிருந்து உலகத்தையும் தங்களையும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு தேவேந்திரன் மற்றைய தேவர்களுடன் கைலாயமலையில் கடுந்தவம் புரிந்தனர்.

### ஞானக்கதிர்

மன்மதனும் தன் காமத் தொழிலைச் சரிவர நடத்த முடியாமையினால் அவர்களுடன் தவத்தில் ஈடுபட்டான். உலகத்திலுள்ள அசையும் பொருள்கள், அசையாபபொருள்கள் அனைத்துமே ஆசையற்றனவாகப் போய்விட்டன. இன உற்பத்தி அடியோடு அற்றுப் போயிற்று. அசுரர் தொல்லை அதிகமாயிற்று. தேவர்களையும், மானிடர்களையும் எந்நேரமும் அசுரர் துன்புறுத்தினர். முன்பு எப்போதும் திரிபுரர்களாகப் பிறவியெடுத்த இம்மூன்று அசுரர்களையும் தன்புன்சிரிப்பால் கொன்றொளித்துத் திரிபுரங்களையும் சுட்டெரித்தவர் சர்வேஸ்வரனேயாவார். எனவே சர்வேஸ்வரன், தேவர்களின் தவத்தின் காரணமாக அவர்கள் முன்தோன்றி "முருகன் என்ற குமரனை உண்டாக்கி, அசுரர்களை அழிக்கச் செய்கிறேன்" என்றார்.

சகலவிதமான உலக சிருஷ்டிக்கும் ஆண்பெண்கூடல் முக்கியமானதாகும். இதற்காகக் காமத்திற்கு அதிபதியான மன்மதனை அழைத்து அவன் மூலமாகத் தனித்திருக்கும் பார்வதியையும் பரமேஸ்வரனையும் ஒன்றுசேர வைத்துக் காமத்தை மூட்டி, அதன் விளைவாகக் கைலாசநாதனுக்கு முருகன் பிறக்கச் செய்யும் முயற்சியைத் தேவர்கள் மேற்கொண்டனர். மிகுந்தபிரயத்தனத்தின் பின் மன்மதன் ஒப்புக்கொண்டு கைலாய மலையை அடைந்து சர்வேஸ்வரனை நோக்கி அம்பு எய்யத் தயாரானான். அப்போது சர்வேஸ்வரனுடைய நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய தீப்பொறி மன்மதனைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கியது.

அதேசமயம் மன்மதனின் அம்பு வழுவி பரமேஸ்வரனை அணுக முயன்றும், முடியாமையால் இமயமலையில் தவம் புரிந்த மலையரசன் மகளான பார்வதி தேவியிடம் பாய்ந்தது. இதனால் பரமேஸ்வரனை விட்டுப் பிரியமுடியாத பார்வதியின் உள்ளத்தில் மோகத்தைத் தூண்டிவிட்டது. இதன் பின் பார்வதி பரமேஸ்வரனின் திருக்கல்யாணம் நடந்தேறியது. தேவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, பரமேஸ்வரன் தம் சுயஉருவத்தை விட்டு ஆறுமுகத்திருமேனியை எடுத்துப் பார்வதியை நோக்கி மோகத்துடன் பார்த்தார். அப்போது ஆறு நெற்றிக்கண்களிலும் இருந்து தோன்றிய ஒளிப்பிளம்புகள் ஆறு உருவங்களாக வடிவமெடுத்து கங்கையிலே ஆறுதாமரை மலர்கள் மீது ஆறு அழகிய குழந்தைகளாகத் திகழ்ந்தன.

நா.க.சண்முகநாதபிள்ளை

கார்த்திகைப் பெண்களின் அரவணைப்பிலே வளர்ந்து பார்வதிதேவியின் அரவணைப்பினால், ஓர் உருவமாகிக் கருணை கூர் முகங்கள் ஆறோடும், கரங்கள் பன்னிரண்டோடும் ஒரு திரு முருகனாக "உதித்தனன் உலகம் உய்ய". முருகனுக்கு உதவியாக அசுரர்களை அழிப்பதற்காக, இலட்சம் வீரர்களும் ஒன்பது தளபதிகளும் உற்பத்தி ஆக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் சேர்ந்து சூரன், சிங்கமுகன், தாரகாசுரன் போன்றவர்களையும் ஏனைய அசுரர்களையும் அழித்துத் தேவர்களுக்கும், மக்களுக்கும் வாழ்வும் வளப்பும் அளித்தனர்.

எனவே கலியகத்தில் தோன்றும் நலிவுகள் அகலவும், எம்மைத் துன்புறுத்தும் நிட்டூரங்களைச் செய்யும் அசுரர்கள் அழியவும் "நிட்டூர நிராகுலன்" ஆகிய முருகனை மொழிக்குத் துணையாகவும் பயந்த தனி வழிக்குத் துணையாகவும் வரவேண்டுமென்று வந்திப்போம், சிந்திப்போம், வாழ்த்துவோமாகுக!

துன்பம் அகன்று விடுதலை
துலங்கிட முருகனை வேண்டிடுவோம். ★

## கலைகளை......

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குமாறு கேட்கின்றான். அதனைப் பெரிதும் விரும்பாத பெற்றோர்கள் அவனுடன் வேடர்களையும் அனுப்பிவைக்கின்றனர்.

வேடர்களுடன் இணைந்து வேட்டையாடிய பாலசூரன் வழிமாறித் தன்னந்தனியே பாதை தெரியாமல் அலைந்து திரிந்தபோது ஓர் இடையனைச் சந்திக்கின்றான். அவனிடம் பாதை காட்டுமாறு கேட்கவே அவனும் பாலசூரனின் ஆடைகளில் பெரும் விருப்பம் கொண்டு அவனுடன் சண்டையிட்டான். இறுதியில் வெற்றி பெற்ற பாலசூரன் அந்தக் காட்டில் உள்ள அழகிய நந்தவனத்தைக் காண்கின்றான். அங்கு சென்று இயற்கையை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் வலேந்திரியானின் மகளான மனோரஞ்சிதத்தைக் கண்டு காதல் கொள்கின்றான்.

இப்படி கதையம்சம் நீண்டு செல்கின்றது.

இவ்விதம் பார்ப்போரை அடுத்து என்ன நடக்கப்போகின்றது என ஏங்கவைக்கும் சிறந்த கதையம்சம் மிக்க ஒரு நிகழ்வு இன்று மேடையேற்றப்படுகின்றது.

யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகள் இன்றைய சூழ்நிலையில் இரவு வேளைகளில் மக்களின் நடமாட்டத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ள வேளையில் நெடுந்தீவுப் பிரதேசம் கொடுத்து வைத்த பிரதேசம் என்றே சொல்ல வேண்டும். இரவிரவாக நடக்கும் நாட்டுக் கூத்துக்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சுதந்திரமாகக் கலந்து கொள்ளும் காட்சி நிம்மதியைத் தரவல்லது.

இவ்வாறு நெடுந்தீவில் நாட்டுக் கூத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியின் அடுத்த அங்கமாக அடுத்தமாதம் 9 ஆம் திகதி "வெடியரசன்" நாட்டுக்கூத்து மேடையேற்றப்படவுள்ளது.

நெடுந்தீவை மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த வீரம் செறிந்த மன்னனின் வரலாற்றை இந்த நாட்டுக்கூத்து படம்பிடித்துக்காட்டுகின்றது. அண்ணாவியார் எஸ்.அமிர்தநாதரின் (வெள்ளைத்தம்பி) நெறிப்படுத்தலில் நெடுந்தீவு கலாசார சபையின் வழிநடத்தலில் இந்தக் கூத்து மேடையேற்றப்படவுள்ளது. ✦

# செய்திச் சரம்

## அரச அதிபர் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம்,ஓக.25

கொழும்பில் நடைபெறவுள்ள தேர்தல் ஒழுங்குகள் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா ஆகியோர் கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் நாடெங்கும் உள்ள உதவித்தேர்தல் ஆணையாளர்களும், தெரிவத்தாட்சி அலுவலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-5)

## சனசமூகநிலைய திறப்பு விழா

கொழும்புத்துறை,ஓக.25

சங்கானை சென்.பீற்றேஸ் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா கடந் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வு இச்சனசமூக நிலையத்தலைவர் பொ.இம்மானுவேல் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (ஐ-30)

## பாடசாலையில் திருட்டு

கொழும்புத்துறை,ஓக.25

யாழ்ப்பாணம மத்தியூஸ்வீதியில் உள்ள சென்.சாள்ஸ் ஆரம்பப் பாடசாலையில் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

இப்பாடசாலையிலிருந்து 250க்கும் மேற்பட்ட ஓடுகளும், முகட்டு ஓடுகளும் களவாடப்பட்டுள்ளன, (ஐ-30)

## வன்னியில் செப்ரிசீமியா

வவுனியா,ஓக.25

செப்ரிசீமியா தாக்கத்துக்கு உள்ளான சிறுமி ஒருத்தி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது 10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் வசித்து வருகின்ற கந்தையா சுகன்யா (வயது4) என்பவரே பாதிக்கப்பட்டுள்ளார். (ஐ-10)

## வேட்டுத் தீர்த்து சங்கிலி அபகரிப்பு

நெல்லியடி,ஓக.25

வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த இனந்தெரியாத நபர்கள் இருவர் வர்த்தகர் ஒருவரின் கழுத்திலிருந்த 5 பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்துக் கொண்டு தலைமறைவாகினர்.

இந்தத் துணிகர திருட்டுச் சம்பவம் கடந்த செவ்வாயன்று இரவு 7 மணியளவில், தும்பளை மதவடிப் பகுதியில் இடம்பெற்றது.

இப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் சுவாமிநாதன் சிறீநிவாசன் என்பவரது கழுத்திலிருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டது.

இது குறித்து பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-109)

## வேலணையில் திறந்த வெளி அரங்கு

நெடுந்தீவு,ஓக.25

வேலணை பிரதேசசபை திறந்த வெளியரங்கு ஒன்றை அங்கு அமைக்கவுள்ளது.

ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி அரங்கின் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வேலணை பிரதேச சபைத்தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார். (ஐ-111)

## நூலகத்துக்கு நிதி

நெடுந்தீவு,ஓக.25

நெடுந்தீவு பொது நூலகத்திற்கென 14ஆயிரம் ரூபாவும், தாய் சேய் நலன் போஷாக்குணவு விநியோகத்துக்காக 25ஆயிரம் ரூபாவும் உள்ளூராட்சித் திணைக்களத்தால் நெடுந்தீவுப் பிரதேசசபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தலைவர் அ.வெ.அரியநாயகம் தெரிவித்தார்,

வடக்கு - கிழக்கு மாகாண சபை மேற்படி நிதியை உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு வழங்கியிருந்தது. (ஐ-111)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

வையத்துள் அறிமுகம்
16 — 09 — 1970



தெய்வத்துள் சங்கமம்
12 — 07 — 2000

திருமதி
## நவநேசன் தீபசோதி

எங்களை உலகுக்கு உவந்தளித்து விட்டு நீயும் உங்களின் வாழ்வை இடையினில் முடித்ததேனோ! எங்களை ஒரு நாழிதானும் என்றும் நீ பிரிந்ததில்லை எங்குநீ சென்றாயம்மா ஏங்கி நிதம் தவிக்கிறோமே.

இன்று (25 - 08 - 2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன் நவநேசன்
பிள்ளைகள் கருண்யா, நிதர்சனா, கானப்பிரியா.
சகோதரர்கள் ம. பொன்கலன் (நோர்வே),
ம. செல்வேஸ்வரன்.
தாயார் ம. சிவபாக்கியம்.

'சிவமஹால்'
அல்வாய், வடமேற்கு,
அல்வாய். (சி/12684)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சிவப்பிரகாசம்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் இல. 30, அரச வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவப்பிரகாசம் 24-08-2000 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்—சீதாதேவி பிள்ளையின் அருமை மகனும் அமரர் சோ. கந்தையா—மீனாட்சிப்பிள்ளையின் மூத்த மருமகனும் மங்களம்மாவின் அன்புக் கணவரும் தியாகலிங்கம், லோகேஸ்வரி, கணேசபிள்ளை, லோகநாதன், சோமதாஸ் (சுந்தரம் எசன்ஸ் ஏஜன்சி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தவமலர், தவமணி, பாசமலர், சந்திரசேகரம், வனிதா ஆகியோரின் மாமனாரும் தாரணி, துர்க்கா, சசிகரன், கலாயினி, சயந்தினி, வைஷ்ணவி, பாலசபரீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-8-2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோமதாஸ்
(சுந்தரம்)(77657)

இல.30, அரசவீதி,
நல்லூர்.

## திருமதி கந்தையா நாகம்மா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் (ஊரைதீவு) பிறப்பிடமாகவும் 3/7, கேசாவில் முதலாம் ஒழுங்கை வண்ணார்பண்ணையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகம்மா நேற்று (24-08-2000) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தையல்முத்து, காலஞ்சென்ற செல்லையா மற்றும் செல்லாச்சி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற கண்ணம்மா மற்றும் தம்பிஐயா (வர்த்தகர், கச்சேரியடி), தங்கலெட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணமணி (வவுனியா), காலஞ்சென்ற தம்பிராசா மற்றும்லோகேஸ்வரி, விநாயகமூர்த்தி (வர்த்தகர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமியாரும், பிறேமலதா (சுவிஸ்), சிவரூபி (சுவிஸ்) தயாளினி (வவுனியா), பிறேம்குமார் (வவுனியா), சசிகலா (சுவிஸ்), தர்ஷினி, கிருஷ்ணானந்தி, தர்ஷிகா, கீர்த்திகா, வினோதன், ஷாலினி, அரிச்சந்திரன் (சுவிஸ்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்), குணசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் விதுசான் (சுவிஸ்), விதுசிகா, நாகதிபா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25 - 08 - 2000) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. தம்பிஐயா
(வர்த்தகர், கச்சேரியடி)

மு. ஆறுமுகம்,
3/7, கேசாவில் முதலாம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (77647)

## சங்கீத சபை பரீட்சை மண்டபங்கள்

தென்மராட்சி, ஓக. 25

வட இலங்கை சங்கீத சபையினால் செப்ரெம்பர் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடத்தப்படவுள்ள எழுத்துத் தேர்வுக்குத் தோற்றவுள்ள தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்—

வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும்—

பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் நெல்லியடியில் உள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் அல்லது மருதனார் மடத்தில் உள்ள வலயக் கிளை அலுவலகத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## தபால் பெட்டி

வலிகாமம் தெற்கு, ஓக. 25

கந்தரோடை ஞானவைரவர் சனசமூக நிலைய சுற்றாடலைச் சேர்ந்த மக்களின் நன்மை கருதி யாழ். தபால் திணைக்களம் தபால் சேகரிக்கும் தபாற்பெட்டியொன்றினை சனசமூக நிலைய முன்றிலில் நிறுவியுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி முதல் இந்தப் பெட்டியில் இருந்து தபால்கள் சேகரிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. (ஐ-152)

## நீர்வேலிப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

நீர்வேலி தெற்குப் பகுதியில் திருடர்களின் கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கரந்தன், பூதர்மடம் ஆகிய பகுதிகளிலேயே திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

மக்கள் குடியிருக்காத வீடுகளின் கூரை ஓடுகள் திருடப்படுகின்றன. பயன்தரும் மரங்களும் வெட்டி ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் பட்டப்பகலிலேயே இடம்பெற்று வருகின்றன. (ஐ-17)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெறவுள்ளன. அடுத்த மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருவிழாத் திருப்பலியும், சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெற்று திருவிழா நிறைவுபெறும்.

## மோதல்கள்

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது 8 புலிகள் உயிரிழந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

முகமாலை, வேம்பொடுகேணி மற்றும் கரடியன்காடு பகுதிகளில் ஏற்பட்ட மோதல்களின்போதே இவர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)


அளவெட்டி வடக்கு
### அம்பாள் சனசமூக நிலைய
கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும்
## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

காலம்: 27-8-2000 ஞாயிற்றுக்கிழமை
இடம்: கந்தரோடை கோயில் குள மைதானம்
நேரம்: நண்பகல் 12. 30 மணி

போட்டிகள் யாவும் A, B, C என்று மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

பிரவேசம் ரூபா 10.00 மட்டுமே

(77642) அம்பாள் ச. ச. நிலையத்தினர்


# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர்
## கா. மாணிக்கவாசகர்

அவர்களின் மரணச் செய்திகேட்டு மனம் நெகிழ்கின்றேன். அன்னாரின் குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

சி. ஆறுமுகானந்தன்
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (சி/12683)

# கண்ணீர்ப் பூக்கள்

முன்னாள் அரச அதிபர் கிளிநொச்சி,
யாழ்ப்பாண மாவட்டங்கள்
## அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

மாந்தரின் சிறந்த நிர்வாகியாய்
மானிட நேயத்தின் சிகரமாய்
மக்கள் சேவையாற்றி மறைந்த
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

செ. பஞ்சாட்சரம்

யாழ். செயலகத்தில், ஓய்வுபெற்ற வட — கிழக்கு மாகாண அரசாங்க நிர்வாக அலுவலர், கணக்காளர்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (77634)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கெங்கேஸ்வரி பாஸ்கரன் (கிளி)

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கெங்கேஸ்வரி பாஸ்கரன் (கிளி) கடந்த புதன்கிழமை (23-08-2000) கனடாவில் காலமானார்.

அன்னார் பாஸ்கரனின் அன்பு மனைவியும் வானதி, தாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும் கைலாயம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் திருமதி வசந்தி இளங்குமரன் (திட்டமிடல் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்), பராதரன் (கனடா) ஆகியோரின் அன்பு அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை 26-08-2000 அன்று கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வசந்தி இளங்குமரன்,
வ. கைலாயம்பிள்ளை
(மாமன்)

தற்போதைய முகவரி,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (சி/12685)

## சின்னப்பிள்ளை ஜெயக்குமார்

பலாலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை ஜெயக்குமார்என்பவர் நேற்று முன்தினம் (23-08-2000) காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னப்பிள்ளை — சின்னத்தங்கம் ஆகியோரின் புதல்வனும், சுலோஷனா, நவரத்தினராசா, பவா, செல்வராசா (லண்டன்), சசிக்குமார் (லண்டன்), சஞ்சீவன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், விஜயபாரதி, வசந்தி (லண்டன்), வேலுப்பிள்ளை, செல்வநாதன் ஆகியோரின் மைத்துனரும், ஜெயந்தி, சுதர்மினி, பிரதினி, பிரதீபன், பிரியா, கஜீபன், ரமணன், வினோதிகா, கோபிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-8-2000) வெள்ளிக்கிழமை ஆவரங்கால் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12. 00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. சின்னப்பிள்ளை
(தகப்பன்)

ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால். (77652)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஒரு தங்கச் சங்கிலியும்1 சோடி தோடும் கம்பஸ(வளாக)ஒழுங்கைக் கும் பிறவுண்வீதி, கஸ்தூரியார் வீதிக்கும் இடையில், பேர்ஸ்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சதாஸ், ஸ்ரான்லி வீதி, என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப் படும். (C/12660)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவ னைக்குகந்த வீட்டுத் தளபாடங்கள் சமையலறைப் பாவனைப் பொருள் கள் என்பன விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். முக வரி: வே.க.சண்முகராசா மே/பா திரு.எஸ்.விஜரெட்ணம் இல.75 குறுக்கு வீதி, நல்லூர். (77513)

நல்ல நிலையிலுள்ள பாவ னைக்கு உகந்த YAMAHA - 50 மோட்டார் சைக்கிள் உடன் விற்ப னைக்கு உண்டு. உங்கள் தொடர் புக்கு: Dr. A. யோகராஜா, இராம லிங்கம் வீதி, ஆர்க்லேன், உடுவில். (77624)

### எஞ்ஜின்கள் விற்பனைக்கு

England lister 6 HP, 8 HP 9HP எஞ்ஜின்களும் இந்தியன் 8 HP எஞ்ஜின்களும் விற்பனைக் குண்டு. தொடர்பு: சிவம், மானிப்பாய் இலங்கை வங்கி முன்பாக அல் லது வரதராசசிங்கம் சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (77626)

### விண்ணப்பிக்கவும்

கணனியில் ஆங்கில தட்டச்சு, தமிழ்த் தட்டச்சு செய்யக்கூடிய திறமை உள்ளவர்கள் சான்றிதழ்களுடன் 01-09-2000 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
யா/ சேர் வை.து.ம.ம. வி,
வேலணை. (77614)

### A/L 2002

கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (F.M. SPI)
தொங்கல்
SAT. SUN. 7-8.AM.
ஆரம்பம்
26-08-2K SAT
விக்னா
கல்வி நிறுவனம் (77629)

## நாட்டின் அரசியல் நிலைமை குறித்து அமெரிக்க குழுவுக்கு விளக்கமளிப்பு

கொழும்பு,ஓக.25

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும், புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டமூலம், மனித உரிமைகள் நிலைமை மற் றும் மனித உரிமைகள் தொடர் பாகவும் ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்கவும் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசும் எடுத்துவரும் நடவடிக்கை கள் தொடர்பாகவும் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்கச் செனட் சபை உறுப்பி னர் குழுவிடம் விளக்கிக் கூறியுள் ளார்.

மூன்று நாள் விஜயத்தை மேற் கொண்டு கொழும்பு வந்துள்ள மேற் படி குழுவில் வங்கி மற்றும் நிதிச் சேவைகள் தொடர் செனட் உறுப் பினர் குழுவின் உதவிப் பணிப்பா ளர் ஜேம்ஸ் மெக்கோமிக், சர்வதேச உறவுகள் தொடர்பான செனட் குழுவுக்கான குடியரசுக் கட்சியின் ஆலோசகர் அடல்போ பிராங்கோ சர்வதேச உறவுகளுக்கான செனட் குழுவின் ஜனநாயக கட்சி உறுப்பி னர் நிஷாதேசி ஆகியோர் அடங்கி யுள்ளனர். (ஐ-6)

### ஜே.வி.பி ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பு

ஜே.வி.பி ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பு ஒன்றை அறிமு கப்படுத்தும்.

மேற்கண்டவாறு அந்தக் கட்சி யின் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹைட்பார்க் மைதா னத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

புதிதாக உருவாக்கப்படும் அரச மைப்பில் சகல இன மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் என வும் -

வேலைவாய்ப்பு, விவசாயம் போன்ற விடயங்களில் தமது கட்சி கூடுதல் கவனம் செலுத்தும் எனவும்- அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### இரத்தச் சோகையால் மரணங்கள்

வவுனியா,ஓக.25

இரத்தச்சோகை நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் கடந்த செவ்வாயன்று இரவு முல் லைத்தீவு மாவட்ட அரச மருத்துவ மனையில் உயிரிழந்துள்ளான்.

விசுவமடு 12ஆம் கட்டையைச் சேர்ந்த நாகராசா சிவலோகநாதன் (வயது12) என்ற சிறுவனே உயிரி ழந்தவராவார்.

கடந்த 6ஆம் திகதி புதுக்குடி யிருப்பு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் மயூரன் என்ற நான்கு மாதக் குழந்தையும் இரத் தச் சோகையினால் உயிரிழந்துள் ளது.

இதேவேளை -

குறிப்பிட்ட நோயினால் பாதிக் கப்பட்ட ஐந்துபேர் புதுக்குடியிருப் பில் உள்ள அரச மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-10)

### மயங்கி வீழ்ந்த இளைஞன் மரணம்

வல்லிபுரக் கோயிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிருஷ்ண ஜெயந்தி உற்சவத்துக்கு சென்ற இளைஞர் ஒருவர் மயங்கி விழுந்து மரணமானார்.

பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து ஆவரங்கால் சிவன் வீதி யில் வசித்து வரும் சின்னப்பிள்ளை ஜெயக்குமார் (வயது23) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவ ராவார்.

இளைஞர் குழுவுடன் மினி பஸ் ஸில் சென்ற சமயம் இருக்குத் திமரென மயக்கம் ஏற்பட்டதாகவும்-

உடனடியாக மந்திகை அரசி னர் ஆதாரவைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அவர் மரண மானதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் மரண விசார ணைக்காக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது. (ஐ-173)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

பொதுப் பட்டமளிப்பு 06-10-2000

கலாநிதி/முதுமாணி/டிப் ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 06-10-2000 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொதுப் பட்டம ளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில பட்டங்கள்/ சான் றிதழ்கள் பெறத் தகுயுடைய வர்கள் 15-09-2000க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத் தல் வேண்டும்.

01. மருத்துவ விஞ்ஞான மாணித் தேர்வு.
02. விஞ்ஞான தகைமைச் சான்றிதழ்.
03. மீன்பிடியியல் தகைமைச் சான்றிதழ்.
04. பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ்.

வேண்டுகோள்களை மேற் குறிப்பிட்ட திகதிக்கு முன்ன தாக அனுப்பிவைத்தல் வேண் டும். வேண்டுகோள் படிவங்க ளையும் மற்றும் விவரங்களை யும் முத்திரை ஒட்டிய 23x10 செ.மீ அளவுடைய சுய விலா சமிடப்பட்ட கடித உறையை *"பிரதிப் பதிவாளர், பரீட்சைக ளும அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகம். திரு நெல்வேலி"*. எனும் முகவ ரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்க ளில் பரீட்சைகளும் அனுமதிக ளும் கிளையில் நேரடியாக வந்தோ பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத வேண்டு கோள்கள் நிராகரிக்கப்படும்.

மேலும் இதற்கான படிவங் களை கீழ்வரும் முகவரிகளி லும் பெற்றுக் கொள்ளலாம்.

01. வவுனியா வளாகம், புகையிரத நிலைய வீதி, வவுனியா.
02. யாழ். கூட்டுறவுப் பாடசாலை, மத்திய வீதி, கொழும்பு - 13.

*பதிவாளர்,*
23-08-2000 (77603)

### வெளிவந்து விட்டது! வெளிவந்துவிட்டது!

## இலக்கியக் கட்டுரைகள்

2000 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடத்திட்டத்திற்கு அமைய

★ க.பொ.த சாதாரணதர மாணவர்கள் தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும் கற்கவும்
★ க.பொ.த. உயர்தர மாணவர்கள் தமிழ் மொழி கற்கவும்

உதவக்கூடிய 38 கட்டுரைகள் கொண்ட நூல் 300 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் *கைவண்ணத்தில் உருவானது*

150 பக்கங்கள் விலை ரூபா - 125.00 (77623)

## மீண்டும் உதயம்

தென்மராட்சியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் மீண்டும் கீழ்க்காணும் விலாசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

வீடியோ, போட்டோ, நவீனமுறை மணப்பந்தல்கள் அமைப்பு, ஆகியன ஒருங்கிணைந்த மகத்தான சேவைதனை ஒரே இடத்தில் பெற்றிட இன்றே நாடுங்கள்

இராஜேஸ்ரோன்
இராஜேஸ்ரோன்

இராசவீதி, நவக்கிரி, புத்தூர். (77603)
பவானி ஜுவல்லறி, ம.ம.வீ. வீதி,நெல்லியடி.

### தொண்டர் ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டம்

காலம்: நாளை (26-08-2000) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு

இடம்: D.M.I கல்வி நிலையம் ஆரியகுளம் சந்தி.

*அனைத்து ஆசிரியர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

தொண்டர் ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டம்.
(77615)

## நன்றி நவிலல்

*இவ்வாண்டு ஆவணித் திங்கள் 19 ஆம் நாள் நோர்வேயில் இடம்பெற்ற*

### ஜெயவீரன் - ஜீன்மேரி

திருமண வைபவத் தினத்தன்று குருநகர் புனித யாகப்பர் ஆலயத் தில் நடைபெற்ற நன்றித் திருப்பலியிலும் இல்ல உபசரணையிலும் பங்கு பற்றி எம்மை மகிழ்வித்து ஆசி கூறிய அனைவர்க்கும், அருட்தந்தையர், அருட்சகோதரிகளுக்கும், ஜீன் மேரியின் சக பல்க லைக்கழக மாணவ, மாணவியருக்கும் எமது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

G.P. பேர்மினஸ் தம்பதிகள்

*இல.11, சென். ஜேம்ஸ் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.* (77617)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 - 04 - 1920 | 05 - 09 - 1999 |

### அமரர் கந்தையா திருச்செல்வம்

திதி:- 25-08-2000

அப்பா!
ஓராண்டு சென்றாலென்ன
ஓராயிரம் ஆண்டு சென்றாலென்ன
எம் நெஞ்சங்களிலே
என்றும் நிலைத்து நிற்பீர்கள்!

*முதலிகோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (77576)

உங்களை மறவா, மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

## 10 ஆவது ஆண்டு நினைவு நாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 - 10 - 1963 | 25 - 08 - 1990 |

### செல்வி முத்துராணி நவரட்ணராஜா (ரமணி)

(இசை ஆசிரியை, யாழ்.பல்கலைக்கழக மாணவி)

அன்புத் தடாகத்தில் மலர்ந்த செந்தாமரையே!
ரமணிக் குஞ்சே!
கல்வியில் கலைமகளாய் கலைபல பயின்ற கலா வித்தகியே!
பூபாளத்தை உன்வீணை இசையில் கேட்டிருந்த எமக்கு
முகாரியின் சோக ராகத்தை எப்படியம்மா
உன் பிரிவில் ஜீரணிக்க முடியும்?
பத்தாண்டுகள் பறந்தோடினாலும் உன்
பாசம் எம் நெஞ்சை விட்டகலாதம்மா!

அன்றைய தினத்தில் உன்னுடன் இறைவனடி சேர்ந்த எம் உறவுகள் அத்தான், சின்னக்கா, ஹேமா, துஷ்யந்தி இவர்களையும் இதே தினத்தில் நினைவுகூருகிறோம்.

உன்னை இழந்து தவிக்கும்
அக்காமார், அண்ணாமார்.
*6ஆம் வட்டாரம், மண்டைதீவு.* (C/12563)

## நாட்டில் அமைதி வேண்டி மகாயாகம்

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சகல இன மக்களும் சுபீட்சமுடன் வாழவும் அமைதி, சாந்தி, சமாதானம் என்பன ஏற்படவும் தெய்வ ஆசி வேண்டி அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாந்தா பீடத்தின் ஏற்பாட்டில் விசேட திவ்ய ஹோம மஹாயாகம் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாலை 6 மணி முதல் 8 மணி வரை கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ தம்பையா சத்திரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இந்த மகாயாகம் சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும். (க)

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் மண்ணின் மைந்தனாய் அவதரித்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி இம்மண்ணுக்கும், மக்களுக்கும் மாபெரும் தொண்டாற்றி இறைபதம் அடைந்த

### அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய அரச அதிபர்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

(சி/12671)

கோப்பாய் மக்களின்

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாயில் திருமணம் செய்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபராகவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகவும் எல்லோரும் பயனுறும் வகையில் நற்பணிகள் பல இறுதிவரை ஆற்றி சிவபதமடைந்த முன்னாள் அரச அதிபர்

### கார்த்திகேசு மாணிக்கவாசகர்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோப்பாய் வாழ் மக்கள் சார்பில்
க. இ. குமாரசாமி (J.P),
ஐ. சிவலோகநாதன், செ. செல்வரத்தினம்
கோப்பாய். (77610)

## இதய அஞ்சலி

யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர்

### அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

(S-L.A.S)

காட்சிக்கு எளியனாய், கடும் சொல்லன் அல்லனாய், மனித நேயத்தின் வடிவமாய், நெருக்கடி காலகட்டத்தில் நிகரற்ற சேவையாற்றிய பெருமகனின் மறைவு எமக்கு ஆறாத் துயரத்தைத் தருகிறது. அவரின் குடும்பத்தினரின் துயரங்களை எமது சங்கமும் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கம்
(பதிவு இல. T.U 2113)

யாழ்ப்பாணம். (77612)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
27 - 11 - 1954

ஓ

உதிர்வு
25 - 08 - 1997

### அமரர் அருட்திரு இ. அருள்பாலன்

(தென் இந்தியத் திருச்சபை ஊழியன்)

அன்பின் ஒளிவடிவம் அறியாய
இடமாற்றத்தினால் அன்பான
எமைவிட்டு மூவாண்டு ஆகியதோ?

இன்றும் நினைவு கூரும்
மனைவி

இராமலிங்கம் வீதி,
உடுவில். (77630)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 25

மத்திய அரசாங்க சேவையில் எழுதுநர் மற்றும் அதனோடிணைந்த சேவைகளுக்கான நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்புக்கு அழைக்கப்பட்டு அங்கு செல்ல முடியாதிருக்கும் பரீட்சார்த்திகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள டி. எம். ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்பு செல்ல முடியாதவர்களின் பதிவுகள் இன்றைய தினம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்புக்குத் தமிழ்மொழிமூல உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு—கிழக்கில் பத்து வருடங்கள் பணிபுரியவேண்டும் என்ற நிபந்தனையுடன் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிபரீட்சைப் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில்' பார்வையிடலாம். (ஐ-3)

## கும்பாபிஷேக மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 25

மூளாய்வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வின்ஆசியுரையினை பிரம்மஸ்ரீ பால பஞ்சாட்சர சிவாச்சாரியாரும், நூல்வெளியீட்டுரையினை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவர். யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் சிறப்புரை யாற்றுவார்.

இந்த ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு மண்டலாபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேகம் நடைபெறும். (க)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி, மூத்தவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணி முதல் 6 மணிவரை கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா நிகழ்த்திவரும் 'மகாபாரதம்' இசைச்சொற்பொழிவுத் தொடரில் இன்று 'பாஞ்சாலி சபதம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 25

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று வரும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'இதிகாச முத்துக்கள்' எனும் தலைப்பில் சிவஸ்ரீ காரை. கு. சிவராஜசர்மா உரை நிகழ்த்துவார். (க-30)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## வாகன சாரதிக்கான பதவி வெற்றிடம்


1. சம்பள அளவுத் திட்டம்:
   165/88-11 — சு.நி — 31/97 -க்கமைய
   2950 — 4700 / 75 10 — 100 10
2. தகைமைகள்:
   - ★ கல்வித் தகைமை ஆகக் குறைந்தது 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.
   - ★ பெருந்து பாரஊர்தி, பாரம் தூக்கியுடனான உழவு இயந்திரம் ஆகியவற்றுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம்.
   - ★ 4 வருடம் வாகனமோட்டிய அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. வயது: 21 தொடக்கம் 45 வரை
4. விண்ணப்ப முடிவு திகதி: 15-09-2000
5. ★ சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   - ★ சங்கத்தில் ரூபா 10 செலுத்தி பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
   - ★ மேலதிக விவரங்களை சங்கப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.
6. விண்ணப்பங்கள்:

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்கலாம்.

பொது முகாமையாளர்
127 கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
23 - 08 - 2000 (சி/12655)

## நீங்கா நினைவில் ஆண்டொன்று



### அமரர் வல்லிபுரம் அப்பாத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், பிரதி அதிபர் யா / வீமன்காமம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை)

தோற்றம் 11 — 09 — 1935 மறைவு 05 — 09 — 1999

திதி: 25 — 08 — 2000

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் திரு உருவாய்
நேசத்தோடெமை அணைத்து
நேர்வழிகள் காட்டிவைத்த — அப்பா!
ஆண்டொன்று ஆனபின்பும்
ஆறவில்லை நினைவலைகள் — உங்கள்
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்...

மனைவி, மக்கள்,
மருமகன், பேரன்.

''சத்தியவாசா'',
லவ் லேன்,
உடுவில். (77591)

## ஊர்காவற்றுறை
## உதவி அரசாங்க அதிபர் பணிமனை
# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 4 - 9 – 2000 ஆம் திகதி முற்பகல் 12. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதே தினம் பிற்பகல் 2. 00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். இதில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரரும் அரச ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான பொது ஸ்தாபனங்களும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. காரைநகர் நீலிப்பந்தனை மாதர் கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத் திருத்தம் | 700/- | 250/- |
| 2. ஊர்காவற்றுறை பெண்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கல் | 900/- | 350/- |

கேள்விப் பத்திரங்களை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 01 – 09 - 2000 நண்பகல் 12. 00 மணிவரை மேற்குறித்த கேள்விப் பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. எக்ஸ். செல்வநாயகம்,
உதவி அரசாங்க அதிபர்,
ஊர்காவற்றுறை.

திகதி: 25 - 08 - 2000 (சி/12621)

# கேள்வி அறிவித்தல்
## வலயக் கல்வித் திணைக்களம்,
## யாழ்ப்பாணம்.

இதன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள். யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும், யாழ். வலயக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் 2000-09-07 ஆந் திகதி முற்பகல் 10. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10. 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ இல | பாடசாலை பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. | யா/யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதான மதிலைப் பலப்படுத்தல். | 250/- | 2500/- |
| 2. | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி மாடிக் கட்டடம் அமைத்தல் (60' × 25') (கீழ்த்தளம் மட்டும்) | 500/- | 5000/- |

.1 மேற்படி வேலை இக்ராட் (ஐசிரிஏடி) நிறுவனத்தின் தரம் 09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

2. 01 ஆவது வேலைக்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தமக்கு இரும்பு ஒட்டுவேலை செய்வதற்கான பட்டறை சொந்தமாக உள்ளது என்பதற்கும், இவ் வேலை பற்றிய முன் அனுபவ அறிவு உள்ளதென்பதற்கும், ஆதாரங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

3 கேள்விப்பத்திரங்களில், பொருள்கள் சேவை வரி (ஜீ எஸ் ரி) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவை வரி (ஜீ எஸ் ரி) சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 2000 . 08 . 31 ஆந் திகதி நண்பகல் 12 00 மணிவரை யாழ். வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளில் இடதுபக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ''தலைவர்'' கேள்விச்சபை, யாழ் வலயக் கல்வித் திணைக்களம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம்'' என விலாசமிடப்பட்டு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 2000—09—07 திகதி முற்பகல் 10. 00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும் மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து முதலாவது வேலையை ஒரு மாத காலத்துள்ளேயும், இரண்டாவது வேலையை மூன்று மாத காலத்துள்ளேயும் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றேன்.

திருமதி செ. மகாலிங்கம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
வலயக் கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி, நல்லூர்.
2000 – 08 – 22 (சி-12650)

## நெல் வயல்கள் உழுது பண்படுத்தல்
## ஐங்கரன் வெதுப்பக உழவு இயந்திரம்
### வேம்படி, காரைநகர்

காரைநகரில் நெல்வயல்கள் பரப்பு 40 ரூபா வீதம் உழுது பண்படுத்தப்படும்.

நெல்வயல்கள் உழுது பண்படுத்த விரும்புவோர் பரப்பிற்கு 40 ரூபா வீதம் பணத்தினை ஐங்கரன் வெதுப்பகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று வந்தால் உடன் வயல்கள் உழுது பண்படுத்திக் கொடுக்கப்படும்.

எஸ். அரசரட்ணம்.
உரிமையாளர்.
(சி/12659)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 – 01 – 1958



உதிர்வு 07 – 09 – 1996

## அமரர் சிதம்பரன் கிருபாமூர்த்தி
(தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. ச. ஊழியர்)

திதி: 25–08–2000

ஈரிரண்டு ஆண்டுகள் சென்றாலும்
உம் மலர்ந்த முகத்தை மறக்க முடியவில்லை!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவியும், குடும்பத்தினரும்.

பயிற்றோலை,
அச்சுவேலி தெற்கு. (77521)

# நீங்காத
# ஈராண்டு நினைவலைகள்



## செல்வி நாகேந்திரம் நிஷாலினி
( பரு/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,
2000 ஆம் ஆண்டு உயர்தர கணிதப் பிரிவு மாணவி )

மலர்வு 21 - 05 - 1981 உதிர்வு 25 - 08 - 1998

( திதி: ஆவணிச் சதுர்த்தி )

உன் சித்தி கேட்கும் நேரத்தில் அரக்கரால்
வந்த வினையில்
எம் புத்தி கெட்டு நிற்கும் எங்களுக்கு
யுக்தி சொல்ல யாருளார்?
தம் குணத்தைக்காட்ட நீதான் வாய்த்தனையோ
உம் ஈராண்டு அல்ல இருபது ஆண்டு சென்றாலும்
'சுகி' உம்மை நாம் மறப்போமா?
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் என்றும் வாடி நிற்கும்
பெற்றார், உறவினர்கள்.

'சுகிஸ்தான்',
அல்வாய் தெற்கு,
அல்வாய். (77593)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

### நிதி உதவி வழங்கல்

**தென்மராட்சி, கொழும்புத்துறை, அரியாலை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த அந்தணர் குடும்பங்களுக்கு உதவி வழங்கும் முகமாக நாளை (26-08-2000) சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்திலும் -**

**வடமராட்சி ஒன்றியக் கிளையில் பதிவு செய்தவர்கள் (28-08-2000) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மாலு சந்தி விநாயகர் தேவஸ்தானத்திலும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

*பிரம்மஸ்ரீ*
*கா.சந்திரசேகர சர்மா*
*பொதுச் செயலாளர்*

(77654)


# எழுதுநர் பதவிக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஓக.25

மத்திய அரசின் திணைக்களங்களுக்கு எழுதுநர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும் நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன என்றும் -

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் கோரப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் போட்டோப் பிரதிகளையும் எடுத்துவர வேண்டும் என்றும் - யாழ்.அரச அதிபர் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 56 பேரின் விவரம் வருமாறு:-

### சனிக்கிழமை அழைக்கப்பட்டோர்

எஸ்.சுகிர்தா (கொக்குவில்), என்.மோகனா (சித்தன்கேணி), என்.வித்தியா (உரும்பிராய் வடக்கு), கே.ருக்ஷி (தாவடி தெற்கு), எஸ்.சன்ஜிர் (நல்லூர்),என்.கணேசன் (கந்தர் மடம்), எஸ்.தயாபரன் (மல்லாகம்), பி.குகப்பிரியா (நல்லூர்), ஆர்.தர்சினி (கோப்பாய் தெற்கு), எம்.சுகன்யா (யாழ்ப்பாணம்), கே.சவிதமதி (மூளாய்), பி.ஜெயந்தி (பண்டத்தரிப்பு), ரி.கமலவேணி (ஏழாலை தெற்கு), எஸ்.பிறேமளா (கோண்டாவில்), வி.என்.சிவச்செல்வன் (நல்லூர் வடக்கு).

பி.சத்தியன் (கல்வியங்காடு), ரி.மோகனராஜ் (புத்தூர் மேற்கு), எஸ்.சிறிகரன் (சித்தன்கேணி), ரி.திருமகள் (கொழும்புத்துறை), எஸ்.பத்மலோசினி (கொக்குவில் கிழக்கு), ரி.ஜெயந்தினி (ஆனைக்கோட்டை), ஆர்.ரதிகா (மானிப்பாய்), ஏ.ஜெமினா (மானிப்பாய்), கே.பிரபாகரமூர்த்தி (வாதரவத்தை), என்.கோணேஸ்வரன் (கொக்குவில் கிழக்கு), கே.ஐ. பிரட்லி (சுண்டுக்குளி).

### ஞாயிற்றுக்கிழமை அழைக்கப்பட்டோர்

எஸ்.மாலதி (நுணாவில் மத்தி), ஆர்.எழில்வேந்தன் (கரணவாய் தெற்கு), ஜி.கிருஷாந்தன் (இமையாணன் கிழக்கு), ஜி.சிவதர்சினி (புலோலி தெற்கு), கே.பிரதீபன் (கரவெட்டி கிழக்கு), என்.உபேந்திரன் (கரணவாய் தெற்கு), எஸ்.ஜெயசங்கர் (வரணி), கே.செல்வன் (கொற்றாவத்தை).

ஆர்.ஆனந்தசொரூபன் (கரவெட்டி தெற்கு), எஸ்.சஞ்சயன் (தெல்லிப்பழை கிழக்கு), ஜி.கவிதா (அல்வாய் கிழக்கு), எஸ்.ஞானபாலன் (தும்பளை), எம்.ரமணன் (தும்பளை), கே.பி.பானு (கரணவாய் தெற்கு), எஸ்.கேமநந்தினி (மட்டுவில் வடக்கு), வி.நந்தகோபன் (புலோலி தெற்கு), எஸ்.செந்தூரன் (அல்வாய் தெற்கு), ரி.உமா (புலோலி மேற்கு).

எஸ்.கவிதா (வதிரி), வி.சிவராஜ் (வரணி), எம்.பிரபிந்தன் (யாழ்ப்பாணம்), ஏ.பகீதரன் (பன்னாலை), எஸ்.செல்வமாலினி (கொழும்புத்துறை), கே.தயாரஞ்சிதம் (மாத்தனை), கே.மதிவதனி (கந்தரோடை), பி.மைதிலி (புலோலி தெற்கு), ரி.சிவகுமாரன் (வதிரி), ஆர்.இராஜேஸ்கண்ணன் (கரவெட்டி வடக்கு), ஏ.சுபாஸ்கரி (திருநெல்வேலி கிழக்கு), ரி.சிவரூபன் (திருநெல்வேலி). (இ-9)

## கல்யாண மண்டப திறப்பு விழா

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் (பெருமாள் கோயில்) ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையுள்ள வேளையில் ஆதீன மகா சபைத் தலைவர் மு.சிவலோகநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் வெ.பொ.பாலசிங்கம் மண்டபத்தைத் திறந்து வைப்பார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார். தொடர்ந்து ஆசியுரைகள் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் நல்லூர் திவ்ய ஜீவன சங்கத் தலைவர் சி.கனகரத்தினம், யாழ். பல்கலைக்கழக உயர் கல்விப் பீடத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், திருவாசகம், திவ்யப் பிரபந்தங்களின் உரையாசிரியர் க.மாணிக்கவாசகர் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். தொடர்ந்து கட்டடத் தொழிலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கான சிரோன்மணி நா.வி.மு.நவரத்தினத்தின் இசைவிருந்தும் நடைபெறும்.

## மாட்டுவண்டிச் சவாரியில் கைகலப்பு

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியின்போது ஏற்பட்ட கைகலப்பில் ஆறு பேர் காயங்களுக்கு உள்ளாகினர். கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நடைபெற்ற மாட்டுவண்டி போட்டியிலேயே இக் கைகலப்பு இடம்பெற்றது.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இரு பகுதியினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலாக மாறியது. இரு பகுதியினரும் மாடுகள் விரட்டக் கொண்டுவந்த துவரம் தடிகள் மற்றும் ஆணிகள் பொருத்திய பொல்லுகளைப் பயன்படுத்தி மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-86)


நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு
பூங்கன்றுகள் கண்காட்சியும், விற்பனையும்

## * பூங்கனிச் சோலை *
## [POONGANI FARM]

**26.08.2000 தொடக்கம் 27.08.2000 வரை**
**காலை 8 மணி முதல் மாலை 7 மணிவரை நடைபெறும்.**

**இயற்கை எழில் நிறைந்த பசுமையான கண்ணைக் கவரும் காட்சிகள்**

- அலங்கார வளைவுகள்
- தண்ணீர்த் தொட்டிகள்
- பல வர்ண மின் குமிழ் பூம்பந்தல்
- பல வர்ண மீன்கள்
- சொகுசு ஊஞ்சல்
- மலையருவிகள்
- பசும்புற் தரைகள்
- பல வர்ணக் குடைகள்
- பல்லினப் பறவைகள்
- பல புதுமைகள் நிறைந்த தண்ணீர் சிந்திகள்
- கண்ணைக் கவரும் பல வர்ண மின்சார விளக்குகள்

மற்றும் பலவர்ண றோசா செடிகள், பலவர்ண அலங்காரச் செடிகள், கனிமரங்கள், பசுமையான காட்சிகளைக் கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எம்மிடம் பூங்கன்றுகள், கனிமரங்கள், சாடிகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பூங்கனிச்சோலை,
திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி.
(நல்லூர் பின்வீதியில் வடக்கு நோக்கி 1500m தூரத்தில் உள்ளது)

T.P - 2976

குறிப்பு:
*வீடியோப் படப்பிடிப்பாளர்கள் 26, 27 ஆம் திகதிகளில் மட்டும் மிக்சிங் எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

பிரவேசம் :- இலவசம்

- உரிமையாளர்

(77640)



# இந்துமத குருமார்களுக்கு விஷேட அடையாள அட்டை

சர்வதேச இந்துமத குருபீட ஸ்தாபகத் தலைவரும், இலங்கை பிராம்மண சமாஜத்தின் தலைவருமான **'சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி" கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் (அகில இலங்கை சமாதான நீதவான்)** அவர்களின் பெரு முயற்சியினால் அரச அங்கீகாரத்துடன் இந்துமத குருமார்களுக்கு விஷேட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக **30.08.2000 புதன்கிழமை** கொழும்பில் இந்துமத குருமார்களுக்கான விஷேட அடையாள அட்டை வழங்கும் வைபவம் நடைபெறுகிறது.

இரண்டாம் கட்டமாக வடக்கு மாகாண இந்துமத குருமார்களுக்கான விஷேட அடையாள அட்டை வழங்கும் வைபவம் **30.09.2000 சனிக்கிழமை** யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

விஷேட அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் இந்துமத குருமார்கள் (பிரதம குருமார்கள், உதவிக் குருமார்கள், அர்ச்சகர்கள், சைவக் குருமார்கள் உட்பட) விண்ணப்பப் படிவத்தை நிரப்பி சர்வதேச இந்துமத குரு பீடத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்டால் விஷேட அடையாள அட்டை வழங்கப்படுவதோடு மாதாந்த வெளியீடான சிவாச்சாரியாரின் 'அருள் ஜோதி' என்னும் ஆன்மீக மலரும் அனுப்பி வைக்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் கீழ்க்காணும் முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.**

*சிவஸ்ரீ சிவ நித்தியானந்தக் குருக்கள்*
(யாழ். மாவட்ட அமைப்பாளர், சர்வதேச இந்துமத குருபீடம்)
ஸ்ரீ முருகமூர்த்தி கோயிலடி, சங்கானை.

*-*-*-*

*பிரம்மஸ்ரீ முத்தையா குருக்கள் நாகேந்திர சர்மா*
ஆதீனகர்த்தா,
ஸ்ரீ பழம்பதி விநாயகர் தேவஸ்தானம்,
மல்லாகம்.

*-*-*-*

## தலைமைச் செயலகம்

சர்வதேச இந்துமத குருபீடம்
இலங்கை பிராம்மண சமாஜம்
90/22, ஜோசப் டயஸ் லேன், கொழும்பு - 15.
T.P & Fax - 527025

(C/12672)



## முதலாவது பிறந்த தின வாழ்த்து



## செல்வன் உதயசேனா அஸ்வந்

உதயசேனா – செல்வி தம்பதியினரின் செல்வப் புதல்வன் அஸ்வந் தனது முதலாவது பிறந்த தினத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் இன்று (25–08–2000) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ரோய்பாபா, கொழும்பில் வசிக்கும் பப்பா, பெரியம்மா, பாபா சித்தி, கலீஸ்ரா சித்தி, சுகந் மச்சான், வினோத் மச்சான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை இயேசுவின் நல்லருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

*ஐ. கலீஸ்ரா (லதா)*
*(சித்தி)*

*ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(77646)

## செவ்வாய்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி) இங்கிருந்து செல்லவிருக்கும் கப்பலுக்கும் சொற்ப பயணச் சீட்டுக்களே எஞ்சியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இனிமேல் வாரம் தோறும் -

செவ்வாய்க்கிழமை புறப்படும் கப்பலுக்கு அதற்கு முந்திய சனிக்கிழமையன்றும் -

வியாழக்கிழமை புறப்படும் கப்பலுக்கு அதற்கு முந்திய திங்களன்றும் -

பிரயாண அனுமதிப்பத்திரம் (Travel Permit) வழங்கப்படும் என்றும் -

யாழ்.சிவில் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பிரயாண அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு மட்டுமே பயணச்சீட்டு முகவர், பயணச்சீட்டு வழங்கமுடியும் என்றும் -

பிரயாண அனுமதிப் பத்திரத்தைப் பெறாமல் பயணச்சீட்டு கொள்வனவு செய்வோருக்கு, பின்னர் எக்காரணம் கொண்டும் பயண அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது என்றும் -

அத்தகையோர் பயணச்சீட்டு இருந்தாலும் பயண அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தால் கப்பலில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டின.

அதேசமயம் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்காகச் செல்வதற்கு அலைமோதும் மக்களின் எண்ணிக்கையைச் சமாளிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட விசேட கப்பல் சேவை எப்போது நடைபெறும் என்பது நேற்றிரவுவரை தெரியவரவில்லை. சம்பந்தப்பட்ட கப்பல் கொழும்பிலிருந்து பொருள்களுடன் புறப்பட்டுவிட்டதாகவும், அது வடக்கில் பொருள்களை இறக்கிய பின்னர் - இரண்டொரு தினங்கள் கழித்து - பயணிகளுடன் இங்கிருந்து புறப்படும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விசேட கப்பலில் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டுப் பெற்றுக்கொண்ட 750 பேர் பயணத்துக்காக இங்கு காத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# புலிகள் அமைப்பைத் தடைசெய்யும் கோரிக்கையை பிரிட்டன் ஏற்குமா?

## சாத்தியம் இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.25

அண்மையில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும்படி இலங்கை அரசு விடுத்த உயர் மட்டக் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசு இப்போதைக்கு செவிசாய்க்காது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவரது அமைச்சின் சட்ட ஆலோசகர் கலாநிதி றோஹான் பெரேரா, பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோர் கடந்த மாத இறுதியில் பிரிட்டனில் அந்த நாட்டின் வெளிவிவகார மற்றும் பொதுநல விவகார அமைச்சர் பீற்றர் ஹெயினைச் சந்தித்துப் புலிகளைத் தடைசெய்யக் கோரும் வேண்டுகோளை உத்தியோகபூர்வமாக முன்வைத்தனர்.

இலங்கையின் இந்தக் கோரிக்கையை முழு அளவில் பரிசீலிப்பதாக பிரிட்டிஷ் தரப்பில் அப்போது பதிலளிக்கப்பட்டபோதும், இது விடயத்தில் பிரிட்டன் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காது என்று கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## பலரின் கவனத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு, தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர்.

குடாநாட்டில் முழு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான கட்டளை அதிகாரி (ஒ.ஒ.ஸி.) பதவியில் ஜானக பெரேராவும், அவருக்குக் கீழ் வடபகுதிப் படைத் தளபதியாக சரத் பொன்சேகாவும் ஒன்றாகப் பணியாற்றிய சமயம் இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு முற்றி ஒருவருடன் ஒருவர் முகம் கொடுத்துப் பேசமுடியாத அளவுக்கு முரண்பாடு நிலவியதாகவும் -

ஜானக பெரேராவுக்குக் கூடத் தெரிவிக்காமல் தம்பாட்டில் படை நடவடிக்கைகளை சரத் பொன்சேகா மேற்கொண்டார் என்றும் -

அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

இருவருக்கும் இடையிலான முரண்பாடு உச்சக் கட்டத்தை அடைந்ததை அடுத்து வேறு வழியின்றி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை அவரது பழைய பதவியான, இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி நிலைக்குக் கொழும்புக்கும் -

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை வன்னிப் படைத் தளபதியாக வன்னிக்கும் -

ஜனாதிபதி இடமாற்றம் செய்தார் என்றும் அப்போது தகவல்கள் வெளியாகியிருந்தன.

அந்த இருவரும் நேற்று இராணுவத் தலைமையகத்தில் மிக நெருக்கமாகப் பழகியது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. (உ)

## விறகு வெட்டச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களுடன் மேலும் 5 பேர் விறகு வெட்டச் சென்றிருந்தனர் எனவும் காட்டுப் பகுதியில் கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து அவர்கள் ஐந்து பேரும் தப்பி வந்துவிட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.(இ-7)

## தற்கொலைத்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும்படி முக்கிய அரசியல் பிரமுகர்களை புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதேபோன்ற எச்சரிக்கை முக்கிய அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

வடக்கு- கிழக்கிலும் தேர்தலைக் குழப்புவதற்காகப் பெரும் தாக்குதல் நடவடிக்கைகளைப் புலிகள் ஆரம்பிக்கக்கூடும் என்று படை வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இதன் காரணமாக அடுத்த ஏழு வாரங்களுக்கு - தேர்தல் நடைபெறவிருக்கும் ஒக்ரோபர் 10ஆம் திகதிவரை - மிக அவதானமாக புலிகளின் தாக்குதல்களை எந்நேரமும் எதிர்பார்த்துத் தயாராக இருக்கும்படி களத்தில் உள்ள படையினருக்கு உயர் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அதேசமயம் புதிய இராணுவத் தளபதி பதவி ஏற்பதால் அந்த நாள்களில் புலிகள் பெரும் அளவில் தாக்குதல் நடத்தும் சாத்தியம் அதிகமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ)


நேற்றைய வீடியோ C.D வெளியீடு

* மாயி
* கண்ணால் பேசவா
பிரபு, சரத்குமார், ஆனந்தராஜ், கௌதமி
* ராஜா கையை வெச்சா

பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ் வீதி
கோண்டாவில் (77611)

நாளை ஆரம்பம்!
A/L 2002
சொத்து முடிவு செய்தல்
8 மணி
கணக்கீடு
D.SAM
பிரத்தியேக வகுப்பு
76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்
C/12652

எமது புதிய வீடியோ
CD வெளியீடுகள்
* மாயி
* கண்ணால் பேசவா
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/12678)

இன்றைய வீடியோ C.D வெளியீடு
* மாயி
* கண்ணால் பேசவா
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்
C/12687)

விண்ணப்பித்து விட்டீர்களா?
IBMS இன் 5000 மாணவர்களுக்கான மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2000/2001
இப்புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பயிற்சி நெறிகள் வார, வார இறுதி நாட்களில் நடைபெறும்.
அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கான விசேட பிரிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
1000 மாணவர்களுக்கு
100% புலமைப்பரிசில்
26.08.2000 விண்ணப்ப முடிவுத்திகதி
Make the right move,
Take the right step.
Join.......
IBMS
No. 701, K.K.S Road,
Jaffna.
N.G

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
புதிய SUZUKI (New Model - GS - 125)
Japan மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
Dr.S.அகிலன்,
யாழ்.அரசினர் வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
சரவணா ரேடர்ஸ்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(77619)

STP Computer World
54A,Palaly Road, Kantharmadam TP: 2674





இலவச பயிற்சி நெறிகளும் புலமைப் பரிசில்களும்

ஒரு மாதகால முற்றிலும் இலவசமான பயிற்சி நெறிகள்
Information Technology
Programming Fundamentals
ஆரம்பம் 27-08-2000 & 30-08-2000 (9.00 A.M)

இலவச பயிற்சி நெறிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பாடவிதானங்களின் அடிப்படையில் பரீட்சைகள்.

இப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் புலமைப் பரிசில்கள்.
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 75% மாண.மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணத்தில் 100% கழிவு (முழுமையான புலமைப் பரிசில்)

பயிற்சி நெறிகள்
Diploma in Business Computer Applications
Diploma in Scientific Computer Applications
(including Mechanical Drawing & AutoCad)
Diploma in MS Office
Diploma in DeskTop Publishing

பதிவுகளை பயிற்சி நெறி ஆரம்பமாகும் திகதிக்கு முன்னர் காரியாலயத்தில் நேரடியாக வந்து உறுதிப்படுத்தவும்.
--நிர்வாகி

கணக்காய்வுப் பரிசோதகர் போட்டிக்கான கருத்தரங்கு
யா/இந்து மகளிர் கல்லூரியில் இம்மாதம் 26,27ஆம் திகதிகளில் காலை 9.00 - பி.ப 1.30 மணி வரை நடைபெறும்
பதிவுகள் சனி காலை 8.30 மணிக்கு
அனுமதிக்கட்டணம் ரூ.50.00
- செயலாளர்,
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்
(C/12677)

A/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
30.08.2000
OXFORD ENGLISH ACADEMY
By:- Mr.B.Jothy
பருத்தித்துறையில்:-
ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர்மடம்.
நேரம் - பி.ப. 4 மணி
நெல்லியடியில்:-
அனுமதியை MATHS CENTREல் பெறவும்
நேரம் மு.ப.7.00 மணி
உடுப்பிட்டியில்:-
அனுமதியை Beacon கல்வி நிலையத்தில் பெறவும்
நேரம் பி.ப. 3.00 மணி
(அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்)
(77618)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

### கனகம்மா நரசிங்கம்

வட்டு. வடக்கு - சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி கனகம்மா நரசிங்கம் நேற்று (24.08.2000) இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துசாமி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்தியர் அண்ணாமலை நரசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்தியர் அண்ணாமலை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான தையல்முத்து, ஐயாத்துரை, குலக்கொழுந்து, முருகுப்பிள்ளை, இராமசாமி, சிவபாக்கியம், ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2000) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வட்டு.வடக்கு*
*சித்தன்கேணி.*

தகவல்
டாக்டர். பா.திருமாறன்
(மருமகன்)
யாழ்.போதனா வைத்தியசாலை

(C/12686)

அமரர்

### கனகசபாபதி சண்முகராசா

(ஓய்வு பெற்ற பிரதேசசபை ஊழியர்- ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கைச் சேர்ந்தவரும், வத்தளையில் வசித்தவருமாகிய கனகசபாபதி சண்முகராசா (பட்டினசபை, ஊர்காவற்றுறை ஓய்வுபெற்ற பவுசர் சாரதி) அவர்கள் 22-08-2000 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - செல்லம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்பையா, காலஞ்சென்ற முத்தம்மா அவர்களின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும் லதா, கலா, சசிகரன் (ஜேர்மனி), சசிதாசன் (ஹொலண்ட்), மீனா, கீதா, மாலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கிரமசீசன் (லக்ஷ்மி அச்சகம், கொழும்பு), காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் சகோதரனும், கவிதா, (ஜேர்மனி), நகுலாம்பிகை, பத்மராஜன், ஜெகதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், நிசாந்தினி, தர்சிகா, ராம்கி, மதுரா, மதன், பிரியா, குகன் ஆகியோரின் பேரனாரும், கணேசன், காலஞ்சென்ற குலசேகரம், காலஞ்சென்ற வடிவேலு, நாகேஸ், இராஜேஸ்வரி, அம்பிகாதேவி, காலஞ்சென்ற ரஞ்சிதமலர், ஆகியோரின் மைத்துனரும் விசிதரன், லங்கேஸ்வரன், லிங்கேஸ்வரி, காண்டீபன், துளசிநாதன் (கனடா), ரகுநாதன், ரஞ்சிதகலா ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*ஊர்காவற்றுறை கிழக்கு,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்:- பத்மராஜன் மீனா

(77636)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.